THE COUNTRY HERALD.

கிராம தூதன்.

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை.

"வீடுதோறும் கல்வியெனும் விளக்கேற்றி வைப்போம்;
வாடுகின்ற மன்னுயிரின் வறுமையினைத் தீர்ப்போம்".

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, கௌரவ பத்திராதிபர், சீவில்லிபுத்தூர்.

மலர்: ௩ | 1941, அக்டோபர்—விசு, ஐப்பசி | இதழ் ௰

1. கடவுள் வணக்கம்: பிரார்த்தனை.

இவ்வளவு துன்புலகத் திருந்துநம
  திறுமாப்புக் கெதிரொன்றில்லை;
அவ்வளவு துன்பிலையேல், அறியாமை
  இறுமாப்புக் களவுண்டாமோ?
எவ்வளவு கொடுத்தாலும் எடுத்தாலும்
  அன்புவழி எண்ணுமாந்தர்
செவ்வளவு செல்வாரோ, தெய்வவரு
  ளிருந்தவரைத் திருப்பாக்காலே?

திருவனந்தபுரம் இலக்குமணப்பிள்ளை

இவ்வளவு துன்பு உலகத்திலிருந்து(ம்) நமது இறுமாப்புக்கு எதிர் ஒன்றில்லை; அவ்வளவு துன்பு இ(ல்)லையேல், அறியாமை இறுமாப்புக்கு அளவுண்டாமோ? எவ்வளவு கொடுத்தாலும் எடுத்தாலும், அன்புவழி எண்ணுமாந்தர் தெய்வ அருள் இருந்து அவரைத் திருப்பாக்கால், செவ்வளவு செல்வாரோ? செல்லார். ஆதலின் அவர்களைத் தெய்வ அருள்தான் திருத்துதல் வேண்டும்.

ஏர்சுழன்று நம்முழவர் ஏற்றபணி செய்திலரேல்
பார்சுழன்று பற்றும் பசி.

விவசாய முதுமொழி.

2. பொன்னுரைகள் : பொறுக்கு மணிகள்.

I. நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே அவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று.

(மூதுரை) ஔவையார்.

II. 1. *தன்னையே நினைத்துத் தான் சுகம் பெறுவதே வேலையென்று விவகரிப்பதெல்லாம் தனக்கேனும் பிறருக்கேனும் சுகத்திற்கு ஆதாரமாகா. பெருந்தன்மை யொன்றே, நினைவாகப் பிறருக்குப் பயன்படும் வேலை எதுவென்று தேடிச் செய்வதே வாழ்க்கையின் நோக்கமாயிருக்கவேண்டும்.*

Thomas Carlyle.

2. *'எத்துணை பெருந்தன்மை ஒருவனால் பாராட்ட முடியுமோ அத்துணை பெருந்தன்மையையும் பாராட்டி விவகரிப்பதே வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும்' என்பதல்லவோ மனிதன் தன் கடமையைச் செலுத்துவதற்கு ஆதாரமான மூலக் கொள்கையாயிருத்தல் வேண்டும்? இதை விட்டு விட்டு, எத்துணை சௌக்கியம் நாம் அடையலாமோ அத்துணை சௌக்கியம் அடைவதொன்றே நம் வாழ்க்கையின் நோக்கமாகவல்லவோ விவகரித்து வருகின்றோம். 'பரமார்த்தம்' என்னும் வார்த்தைக்கு இப்பொழுது 'வயிறு' என்று ஒரே அருத்தம் நமது அகராதியில் காணப்படுகிறது. நமது சட்டசபைகளிலும் மற்ற இடங்களிலும் நாம் பேசுவதும் வேண்டுவதும் ஆன்மாவில் இருந்தல்ல, ஆன்மாவிற்காகவல்ல, வயிற்றிலிருந்து வயிற்றிற்காகவே. ஆனபடியாற்றான் அவற்றால் நாம் பயனொன்றும் காணாதவராயிருக்கின்றோம்.*

Thomas Carlyle.

III. *தமிழன், தன் தமிழை நன்கு கற்றல் வேண்டும்; தமிழுணர்வு சாலப்பெறுதல் வேண்டும்; சுருங்கச் சொன்னால், தமிழன் தமிழனாக வாழ விரும்ப வேண்டும். அதனால் அவனது உள்ளம், தமிழறிவு பெறும் வழியில் எத்துணை இடுக்கண்கள் அடுக்கிவரினும் மிடுக்குடன் தான் கொண்ட கருத்தை வென்று வீறு கொண்டு நிற்கும். நிற்குமிடத்து அவன் மனக்கிழியில், தமிழிலக்கணம் பிறமொழி இலக்கணங்களுட் காணப்படாத பண்டை மக்களின் மனப் பண்பும் ஒழுகலாறும் விளங்கக் காட்டும். அக் காட்சியில் பேரின்பம் ஊறும். அதனை நுகருந்தோறும், அவன் அதனை ஆரப்பெற்று உண்டு ஆர்வமுறுவான். அத்தகைய இன்ப ஊற்றாக உள்ளது தமிழிலக்கணத்துக் கூறப்படும் பொருளிலக்கணப்பகுதியென்றால், அது மிகையாகாது.*

வித்துவான் ஔவை துரைசாமிப்பிள்ளை.

கிராமதூதன் வரவேற்பு

விருத்தம்

சரித்திர மனைத்தும் இந்தியா கடல்சூழ் தரணிக்கோர் களஞ்சியமெனுங்கால்
தரித்திரம் நுழைந்த தேதுவழியேனவும் தனித்துணர்ந் திட நினைவின்றி
விரித்திடும் பாய்மேல் துயில்கொளு மாந்தர் விழித்தேழுந்துழைத்திடு மார்க்கம்
வரித்திடுங் கிராமதூதனே! வருக ! வாழ்க நீ உலகுள வரையே !

ஓர் கிராமவாசி.

3. தலையங்கம் :

ஆரம்பக் கல்வி.

சில்லாக் கல்விக் கழகத்தின் உறுப்பின ராக ஒன்பதாண்டுகளும் நகராண்மைக் கழக உறுப்பினராக ஏழெட்டாண்டுகளும் தலைவ ராக இரண்டாண்டுகளுக்கு மேலும் இருந் தோம். வாரந்தோறும் பத்தாண்டுகள் வரை கிராமங்கள் போய் வந்துகொண்டிருந்த காலத் திலும் ஆரம்ப ஆசிரியர்கள் பலரைச் சந்தித்து வந்தோம். நாமே கௌரவ தலைமையாசிரியராக வும் நம் நண்பர்களிற் சிலர் கௌரவ துணை யாசிரியர்களாகவும் ஒரு இரவுப் பள்ளியும் இன் னொரு கௌரவ ஆசிரியரின் கீழ் ஒரு இரவுப் பள்ளியும் ஒரு சம்பள ஆசிரியரின் கீழ் ஒரு இரவுப் பள்ளியும் பல ஆண்டுகள் நடத்தி வந்தோம். நகராண்மைக் கழகத் தலைவராக இருந்தபொழுது, நாமே நகராண்மைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பென்சன் (Benson) முதற் பாடப் புத்தகத்தை மூலமாக வைத்துக் கொண்டு விவசாயம் சொல்லி வைத்தோம். விவசாயம் நெசவு முதலிய கைத்தொழில்கள் சம்பந்தமான பல புள்ளி விபரங்களை நக ராண்மைப் பள்ளிகளுக்குச் சேகரித்துத் தந்து அவற்றை யொட்டியே பள்ளிக் கணக்குப் புள்ளிக்கும் ஆகும்படியாகப் பிள்ளைகளுக்குப் போதித்து வரும்படி சொல்லி வந்தோம். சமய வகுப்புகளமைத்துச் சிலருக்குச் சமயப்பாடங்க ளும் சொல்லி வைத்தோம். ஆரம்ப ஆசிரியர் கள் சங்கீதத்திலும் சித்திரம் வரைதலிலும் நடித்தலிலும் முக்கியப் பங்கெடுத்து வரும்படி யாகச் சமையம் நேர்ந்துழியெல்லாம் ஏற்பாடு செய்தோம். அழைத்தும் அழைக்காமலும் ஆரம்ப ஆசிரியர்கள் கூட்டங்களுக்குப் போய்த் தலைமை வகித்தும் பாடங்கள் கற்பிக்கும் முறையை விளக்கியும் அங்கே நடப்பன வற்றைக் கவனித்தும் வருகிறோம். கல்வி பற்றிய நூல்களும் பத்திரிகைகளும் படித்து வருகிறோம். 1936 ஜூன் மாதம், 'இந்து' ஞாயிற்றுக்கிழமை பதிப்பொன்றில் சென்னை யின் ஆரம்பக் கல்வி (Elementary Education in Madras) என்றொரு கட்டுரையும் எழுதினோம். அதற்கு முன்னும் பின்னுமாக, கல்வி பற்றிப் பல கட்டுரைகள் பத்திரிகைகளில் எழுதி வருகிறோம். இப்படியாக, சென்ற இருபது ஆண்டுகளுக்கு மேலாக, ஆரம்பக் கல்வியில் ஈடுபட்டும், நூற்றுக்கணக்கான ஆசிரியர்களிடம் நெருங்கிப் பழகியும் வருகி றோம். இதுவரை, யாமறிந்த (சம்பளம் வாங்கி வரும்) ஆசிரியர்களிலே தந்தொழிலின் அருமை பெருமையை உணர்ந்து அதனை ஆர்வத்துடன் செவ்வனே செய்து வருபவர் ஒருவரையேனும் நாம் கண்டதில்லை யென்றே வெட்கத்துடன் ஒப்பவேண்டிய நிலைமையி லிருக்கிறோம்.

உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களேனும், தங்கள் அக்கறையைப் பொறுத்தே தங்கள் பள்ளிகளுக்குப் பிள்ளைகள் வருவதும் தங்க ளுக்கு உதவித் தொகை கிடைப்பதுமாக இருப்பதையிட்டு, கொஞ்சம் ஆர்வம் உள்ளவர் களாகக் காணப்படுகின்றனர். பொதுத் தாபனப் பள்ளிகளில் நல்ல சம்பளமும் சம்பள உயர்வும் ஆசிரியர்களின் உழைப்பைப் பொறுத்ததாக இல்லை யாதலால், அந்தப் பள்ளி களில் குறைந்த உதவி பெறும் பள்ளிப் படிப் பில் அரைவாசியேனும் நடந்து வருவதாகச் சொல்லுவதற்கில்லை. இதிலிருந்து, ஊதியம் போதாததால்தான் ஆரம்ப ஆசிரியர்கள் முயற் சியில் அக்கறை கொள்ளாதவர்களாக இருக்கி றார்களென்று சொல்லுவதற்குமில்லை.

ஒரு காலம் போக்கற்றவர்களுக்குப் போலீசென்றிருந்தது. இப்பொழுதுபோலீசில் நல்ல சம்பளங்களேற்பட்ட பிறகு, அந்த வசை யே பள்ளிக்கூடங்களுக்கு மாறிவிட்டது. சரி

யாகக் கையெழுத்துப் போடத் தெரியாத வெட்டியானுக்கும் குறவனுக்கும் கூட மாதம் ஏழு ரூபா சம்பளம் சாதாரணமாகக் கிடைக்கிறது. சேவக வேலைக்கும் பன்னிரண்டு ரூபாவுக்குக் குறைந்த சம்பளமில்லை. அப்படியிருக்க, மற்றப்படி கிடைக்கக் கூடிய அதிக வரவையும் விரும்பாது குடும்பமும் குடும்பச் செலவும் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு வரும் நிலைமையிலும் நிரந்தரமாக ஏழு ரூபாவுக்கும் பன்னிரண்டு ரூபாவுக்கும் 'நான் நீ' யென்று போட்டி போட்டுக்கொண்டு ஆசிரியர் வேலை பார்க்க வருகிறவர்களிடம் நாம் திறமையைத்தான், உழைப்பைத்தான், உண்மையைத்தான், மான ரோசத்தைத்தான் எப்படிக் காண முடியும்?

நாம் எவ்வளவோ உற்சாகப்படுத்தி நல்ல வார்த்தை சொல்லி வந்த காலத்தும், நம்முடைய கற்பனைகளைச் சரிவர அனுசரித்து வராத ஆசிரியர்களும், இப்பொழுது வயிற்றிலடிப்பதற்குப் பயந்து கூடியவரை சரியாக நடந்து வருவதில் ஒரு வகையாகத் திருப்தியடைகிறோமென்றாலும் ஆசிரியர்களின் நிலைமை இவ்வளவு கேவலத்திற்கும் வந்துவிட்டதென்ற வருத்தமே மேலாடி நிற்கிறது. தெய்வத்திற்கும் அடுத்தபடியாக ஆசிரியர்களைப் போற்றிவந்த நம் நாட்டில் இப்படியும் ஆசிரியர்களைச்சங்கடங்களுக்குட்படுத்தித்தான் பள்ளிக்கூடக் காரியங்கள் நடைபெற வேண்டியதாயிருக்கிறதென்றால், இதனைப்பற்றி நாம் வருத்தப்படாமலிருக்கவும் முடியுமா?

நம் நாட்டின் விமோசனமே முக்கியமாக ஆரம்ப ஆசிரியர்கள் கையில் இருக்கிறதென்பதை நம் நாட்டுத் தலைவர்களும் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை; ஆரம்ப ஆசிரியர்களும் உணர்ந்து அதற்குத் தக்கபடியாக நடக்கக் காணவில்லை. அரசாங்கமும் 'காணம் தின்னாத குதிரையும் வேண்டும்; காற்றுப் போலப் பறக்கவும் வேண்டும்' என்று நிர்ப்பந்தம் செய்து வருகிறது. இப்படிப் பட்டினக் கரைகளிலும் பட்டினக்கரைப் பக்கமாகவுமுள்ள பள்ளிகளைத் தான் திடீரென்று போய்ப் பார்க்கவும் கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்கவும் எவ்வளவு காலம் சாத்தியமாகும்? இரண்டு தூற்றல் விழுந்தால், காலைத் தூக்கி நடக்கவிடாமலும் வண்டிச் சக்கரத்தை உருளவிடாமலும் பிடித்துக் கொள்ளுகிற கரிசற் காட்டுப் பாதை வழியாகப் போய்ச் சேரும் கிராமங்களிலுள்ள பள்ளிகளும் இந்த நிர்ப்பந்தத்தால் திருந்திவிடுமா? அதிகாரிகள்தான் சலியாது எவ்வளவு காலம் தங்களையும் சிரமப்படுத்திக் கொண்டு இப்படி நிர்ப்பந்தம் செய்துவர முடியும்? (திடீரென்று போய்ப் பார்க்கக் கூடாதென்பது நம் கருத்தல்ல; அப்படியே செய்ய வேண்டும். ஆனால் அதுவே சர்வ சாதாரணமாகி விடுவதாலும், ஆசிரியர்கள் திருந்திவிட மாட்டார்கள்.

அடிக்கும் ஒரு கை, அணைக்கும் ஒரு கை என்பதுபோலக் கண்டிப்போடு நின்றுவிடாமல் ஆசிரியர்களின் ஊதியத்தையும் அதிகப்படுத்த வேண்டும். அப்படியானால்தான், ஆசிரியத் தொழிலில் ஆர்வம் உள்ளவர்களும் விளக்கமாகவும் மான ரோசத்தோடும் வேலை செய்யக் கூடியவர்களும் இனியேனும் ஆரம்ப ஆசிரியர்களாக வர முடியும். அப்படி வராதவரை, வெறும் கண்டிப்பால் நல்ல பயன் விளையவு மாட்டாது.

கிராமங்களிலிருக்கும் நாட்டாண்மைக் கழகப் பள்ளிகளும், (District Board Schools), அங்கங்கே கிராமப் பஞ்சாயத்திருக்குமென்றால், அதனிடமே ஒப்புவிக்கப் படவேண்டும்; இல்லையென்றாலும், பஞ்சாயத்துக்களை அமைத்து அவற்றினிடம் ஒப்புவிக்கப்படவேண்டும். கிராமப் பஞ்சாயத்துக்களே நிலவரி யதிகாரிகள் மேற்பார்வைக்கு வரும் பொழுது, அவர்கள் அந்தப் பள்ளிக்கூடங்களையும் சரியாகக் கண்காணித்து வரமுடியும்.

பட்டினக்கரை ஆசிரியர்களுக்கு ஒரு சம்பளத் திட்டமும் கிராமாந்தர ஆசிரியர்களுக்கு ஒரு சம்பளத் திட்டமும் அமைக்கப்படவேண்டும். அந்தத் திட்டம் குறைந்த திட்டமாகவேனும் எங்கும் நிலவி வர வேண்டும்.

பொதுத் தாபனங்களுக்கு அரசாங்கம் செய்துவரும் உதவியும் ஒரு முறையாக இல்லாதிருக்கிறது. சில தாபனங்களுக்கு பூராக் கல்விச் செலவுமே கொடுக்கப்படுகிறது; அனேக தாபனங்களுக்கு அரைவாசிக்குக் குறையாமலும் கொடுக்கப்படுகிறது; மற்றவற்றிற்கு அரைவாசிக்கும் குறைவாகவே கொடுக்கப்படுகிறது. ஆரம்பக் கல்விச் செலவு பூராவும், மைசூரிலிருப்பதுபோல, அரசாங்கச் செலவாகவே யிருக்கலாம்; ஆனால், அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் வரை எல்லாத் தாபனங்களுக்கும் ஒரே மாதிரியாக அவை தங்கள் கல்வி நிதியினின்றும் செலவழிக்கும் அளவு சாதாரணமாகக் கொடுப்பதென்றும் அரசாங்கத்தாராணைப்படியே வரி விதித்தும் கல்வி நிதிக்கு ஒதுக்கியும் அந்தத் தொகை கல்விச்செலவிற்குப் போதியதாக இல்லாதபொழுது அந்தஅளவிற்குமட்டும் கூட்டித் தருவதென்றுமிருக்க வேண்டும். இஃதொரு நியாயமான ஏற்பாடாகவுமிருக்கும். இதனால், இந்த இனத்திற்காக அரசாங்கம் செலவழித்து வருகிற தொகையும் குறையும்.

உயர்தரப்பள்ளிகளுக்கு அவற்றினுடைய சாதாரண வரவு போகச் செலவாகும் தொகையில் பேர்பாதித் தொகையே உதவுவதென்றிருக்கும் முறையே, ஆரம்பக் கல்விக்கும் அனுட்டித்து வரலாம். பள்ளிக்கூடங்களுக்கெனத் தனி நிதி வைத்து நடத்தி வரும் பள்ளிகளுக்கும் இப்பொழுது அனுவசியமாகக் கொடுத்து வரும் உதவியை நிறுத்திவிடலாம்; அல்லது அதன் வரவு போதாதென்றால், அந்த அளவிற்குக் குறைத்துவிடலாம்.

உதவிபெறும் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களும், பட்டினக்கரை கிராமாந்தரத் திட்டங்களை அனுசரித்தால், தங்கள்பள்ளிகளில் என்ன சம்பளம் வாங்கி வரக்கூடுமோ, அதே சம்பளம் அவர்கள் வாங்கிவருவதாகக் கருதியும் அவர்கள் ஆசிரிய வேலையுடன் வேறு வேலையெதுவும் பார்த்து வந்தால் அதற்காகப் பெற்று வரும் அல்லது பெறக் கூடிய சம்பளத்தைக் கழித்தும் பள்ளி நிருவாகச் செலவைக் கூட்டியும் வரும் மொத்தத் தொகையில் பாதி உதவியாகக் கொடுத்து வரவேண்டும். இந்த இனத்தில் அரசாங்கச் செலவு அப்படிக் கொடுத்துவர ஆரம்பிக்கும் காலமுதலே அதிகமாகவும் கூடும். என்றாலும், இஃது அவசியம் செய்யப்படவேண்டிய நியாயமாதலால், அரசாங்கம் இதனைப் பொறுக்கத்தான் வேண்டும். சாதாரணமாக, இப்பொழுது அரசாங்க உதவி தவிர்த்து வேறொரு வரவும் ஆரம்பப் பள்ளிகளுக்கில்லை. இந்த நிலைமையில், நிர்ப்பந்திப்பதால் மட்டும் பள்ளிக்கூடக் காரியங்கள் செவ்வனே நடந்திடமாட்டா. இந்த முறை அமுலுக்கு வருமென்றால், ஆசிரியர்களும் ஒரே பள்ளியில் தொடர்ந்திருந்து வருவார்கள். தலதாபனங்களும் செவ்வையாக நடந்துவரும் பள்ளிகளைத் தங்கள் ஆதீனத்திற்குள் எடுத்துக்கொள்ளவும் கூடும். அப்படியாகும் பொழுது, அப்பள்ளியாசிரியர்களுக்கும் ஏற்றம் எளிதிலமையும். அதனால் அரசாங்கத்திற்கும் அதிகச் செலவாவதொன்றுமில்லை. இப்படியாக, உதவி பெறும் பள்ளிகள் குறைந்து எங்கும் அரசாங்கப் பள்ளிகளும் தலதாபனப் பள்ளிகளும் தர்மத் தாபன, சமயத் தாபனப் பள்ளிகளுமாக அமைந்து போகும். அதன்பின், எல்லாப் பள்ளிகளையும், ஒரே தரமாகவும் அதுவும் உயர்ந்த தரமாக நடத்தி வருவது எளிதாகிவிடும்.

ஆரம்பப் பள்ளிகளுக்கு மிகவும் குறைந்த அளவே உதவுவதென்பது கொஞ்சமும் நியாயமில்லை. அரசாங்கம் தன் சொந்த ஆரம்பப் பள்ளிக்காகச் செய்கிற செலவில் பேர் பாதியேனும் அதே வேலையைச் செய்து முடிக்கிற பிறருக்குதவ வேண்டாமா? இந்தக் குறைந்த உதவியையும் பணமில்லாததற்காகக் குறைக்கிறோமென்பது (General cut) அக்கிரமமேயாகும். நாம் மேலே சொல்லியபடிக்கேனும் ஆசிரியர்களுக்குள்ளது கொடுத்தால் போதும். குறைவாகக் கொடுத்து வருவதைச் சரியாக நடத்துவதற்காகக் கூட்டுகிறோமென்பது (Increment) சிறு பிள்ளைகளை வாழைப்

பழங்கொடுத்து ஏமாற்றுகிற கதையேயாகும். சரியாக நடத்தி வராத பள்ளிகளின் உதவியை அவ்வளவிற்குக் குறைத்து இரண்டொரு தடவை யெச்சரிக்கவும் வேண்டும்; அதற்கும் திருந்தவில்லை யென்றால், நிறுத்திவிடவே வேண்டும்.

இப்பொழுது, புதுப்பள்ளிகளும் பழைய பள்ளிகளின் புது ஆசிரியர்களின் எண்ணமும் ஒரு வரைமுறை யின்றியே அதிகரித்து, வருகின்றன. அவற்றிற்கென ஒரு திட்டம் (Plan of expansion) இருக்கவேண்டும். அவற்றிற்காக அரசாங்கம் அதிகப் பணமுஞ் சேர்த்து ஒதுக்கி வரவேண்டும்.

இப்பொழுது நிலவரியே அதிகப்படியாக இருந்துவரும் நிலைமையில் அதனை யொட்டி எவ்வகை வரியும் அதிகப்பட விதித்தலும் கூடாதாகும். ஆகையால், நிலவரியில் ஒரு பகுதியையும் விற்பனை வரியில் ஒரு பகுதியையும் கல்விச்செலவுக்கென ஒதுக்கிவரவேண்டும்; அந்த விகிதமும் வருடத்திற்கு வருடம் கூடி வரவேண்டும். அது போலவே, தலதாபனங்களும், தங்கள் சொத்து வரியின் ஒரு பகுதியைப் போதிய அளவிற்குக் கட்டாயம் கல்விக்காக ஒதுக்கி வரவேண்டும். கல்வி வரியெனத் தனி வரியொன்றும் விதிக்கக் கூடாது.

ஆசிரியர்களின் கூட்டங்கள் இப்படியாகவேனும் தங்களுக்கு நியாயம் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்வதையும் அரசாங்கம் இவ்வளவேனும் அவர்களுக்கு நியாயம் வழங்கி வர இணங்குவதையும் பொறுத்ததாகவே, ஆரம்பக் கல்வியின் விருத்தி யிருக்கிறது.

---

4. வேளாண்மை:

நெல்லுக்குர மிடுதல்.

Chapter XI Rice in Madras, By Ramiah

(சாரம்) I

நம் நாட்டில் நெல் பயிரிடுவதற்கும் மற்றும் பயிர்களிடுவதற்கும் வேறுபாடுகளுண்டு. நெல் பயிரிடுவதற்காக நிலம் தொளியாக்கப் படுகிறது. நெற் பயிர் வளருங் காலமெல்லாம் நிலத்தில் நிரம்பத் தண்ணீருங் கட்டி வைக்கப் படுகிறது. நடுகைக்கு முன் தொளியாக்கப்படுவதால், மேல் தரையும் களியாகவும் நுண்ணியதாகவுமாகிறது. தொளியாக்குவதாலும் தண்ணீர் கட்டுவதாலும் தரை நாளுக்கு நாள் கடினமாகக் கூடும். ஆகையால், நாம் நிலத்துக் கிடும் உரமானது பயிர்க்குரமாவது மட்டும் போதாது; நிலம் கனத்துப் போகாமல் இளக்கியும் வரவேண்டும். அப்படிச் செய்வதற்குக் குழைதான் ஏற்ற உரமாகத்தெரிகிறது.

நிலத்தில், நிரம்பத் தண்ணீர் கட்டி வைப்பதால், தீயகம் (Oxygen) தாராளமாயிருக்கக் கூடியதில்லை. சாதாரணமாக உரத்திலுள்ள காலகம் பல இடை மாறுதல்களுக்கு (Intermediate changes)ப் பின் ஆகாயத்திலுள்ள தீயகத்தோடு கலந்து காலகக் காடி (Nitric acid) யாகும். அது நெற் பயிருக்கும் நல்ல உணவாகக் கூடும்; ஆனால், நெல் சாகுபடியாகும் நிலங்களிலும் தீயகம் காணப்படுவதில்லையாதலால் காலகக் காடிக்குப் பதிலாக நவச்சார ஆவியே (ammonia) உண்டாகிறது. நெற்பயிர் இந்த ஆவியையும் எளிதாகக் கிரகித்துக் கொள்ளுவதால், நெற்பயிர்க்கிடும் குழையுரம் அதற்கேற்ற நல்ல உரமாகி விடுகிறது. நெற்பயிரிடும் நிலங்களில் புளிப்பேறுவதால் (Fermentation) காலகை (Nitrates)யுரத்திலிருக்கும் காலகம் (Nitrogen) தனியாகப் பிரிந்து ஆவியாகப் போய்விடுகிறது. நெற் பயிர் இந்தக் காலகத்தை உபயோகித்துக் கொள்வதில்லை

யாதலால் நெற்பயிருக்குக் காலகையை மட்டும் உரமிடுவதும் அவ்வளவு உசிதமல்ல.

நெல், ஒரு தானியப் பயிராதலால், அதற்குக்காலகத்துடன் எரிகக்காடியும் சாம்பர உப்பும் வேண்டும். தரையில் சாதாரணமாகப் பயிருக்கு வேண்டிய உணவெல்லாமிருக்கலாம். ஆனால், அவை பயிருக்குதவக் கூடியனவாக யிருந்தால்தான், அவற்றால் பயிருக்குப் பிரயோசனமிருக்கக்கூடும். அவை தண்ணீரில் கரையக்கூடியனவாக இருந்தால்தான், அவை பயிருக்குதவக்கூடுமெனச் சொல்லலாம்.

ஒரு ஏக்கரில் மூவாயிரம் இராத்தல் தானியமும் அதே யளவு வைக்கோலும் உண்டாவதாக இருந்தால், 48 இராத்தல் காலகமும் 23 இராத்தல் எரிகக் காடியும் 41 இராத்தல் சாம்பர உப்பும் நிலத்திலிருந்து கழியும். இந்தச் சத்துக்கள் நிலத்துக்குத் திரும்பவும் ஏற்றப் படவேண்டும். ஆனால், சில நிலங்களில் இயற்கை தானாகவே இந்தக் குறைவை நிரப்பிக் கொள்ளும். சில நிலங்களில் உரமே யிடாமல் வருடா வருடம் ஒரு ஏக்கரில் 2,000 இராத்தல் நெல் விளைவதையும் நாம் காணலாம்.

ஒவ்வொரு நிலத்துக்கும் வேண்டியிருக்கும் உரம் இவ்வளவென அந்தத் தரையைப் பகுத்துப் பார்த்து (analyse), அதிலுள்ள காலகம், எரிகக்காடி, சாம்பர உப்பு இவற்றின் அளவைத் தெரிந்தால் தான், சொல்ல முடியும். தஞ்சாவூரில் 87 சதம் காலகமும், 80 சதம் எரிகக்காடியும் குறைவாக இருக்கின்றன. பெரியாற்றில் எரிகக்காடி 90 சதம் குறைகிறது. காலக உரம் இயற்கையாக இருப்பினும் சரி, செயற்கையாக இருப்பினும் சரி அது திட்டமாக நெல்லுக்கு நல்ல பலனைத் தரும்; என்றாலும் குழையும் போடவேண்டும்.

பச்சைக்குழை யுரம் போடும் பொழுது நிலத்திலிருந்து என் வாயுக்கள் வெளியேறுகின்றனவென்றும் ஆராய்ச்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. தண்ணீர் வழியாகவும் அதன் மேற்பரப்பிற்கும் தீயகமும் காலகமும் வருகின்றன. தரைக்குள்ளாகக் கொள்ளிவாயுவும் நீரகமும் கரியிருதீயதையும் காணப்படுகின்றன. அப்படி வெளியேறும் தீயகத்தை நெற்பயிர்கள் தங்கள் வளர்ச்சிக்காகக் கவர்ந்து கொள்ளுகின்றன. நெற் பயிர் தண்ணீரிலேயே வளர்ந்தாலும் தண்ணீரிலேயே வளரும் வேர்களுக்குள்ள குணங்கள் அதன் வேர்களுக் கில்லை. அதன் வேர்களுக்கு நிறையக் காற்றும் வேண்டும். அந்தத்தேவை மேலே சொல்லிய படி வெளியேறும் தீயகத்தால் பூர்த்தி செய்யப் படுகின்றன. நிலத்தில் கட்டும் தண்ணீர்சுவறிக் கீழே கூடியும் செல்லுமென்றால்தான் நெற் பயிரின் வேர்கள் வெளியேறும் தீயகத்தைக் கவர்ந்து கொள்ள முடியும். தண்ணீர் வெகு விரைவாகக் கீழே சுவறிச் செல்லுகிறதென்றாலும் அதில் தீயகம் அதிகமாயிருப்பதுமில்லை; நெற் பயிரின் வேர்களுக்குப் போதிய தீயகம் சேருவதுமில்லை. தண்ணீர் கீழே கூடி யிறங்குவது மெதுவாக இருக்கும்பொழுது தான், தண்ணீரில் தீயகமும் அதிகமாகச் சேருகிறது; அதனால் வேர்களுக்கும் தீயகம் அதிகமாகச் சேருகிறது.

பச்சைக் குழையுரமிடுவதால், நிலத்தில் புளிப்பேறுவதும் அதிகமாகிறது; அதனால் தீயகம் உண்டாவதும் அதிகமாகிறது. பச்சைக் குழையினாலும் காலகம் பிரிந்து தனியாக ஆகாயத்தோடேயே கலந்து விடுகிறதென்றும் பயிருக்குதவுகிறதில்லை யென்றும் தெரிகிறது. அதனுதவியெல்லாம்மறைமுகமாகத்தீயகத்தை நெற் பயிர் வேர்களுக்கதிகமாகச் சேர்க்கிறதே யாகும்.

நிலத்தை மற்றப்படியாகவும் விருத்தி செய்து வந்தால் மட்டும், பச்சைக் குழையால் அதிக நன்மையடைய முடியும். சாதாரணமாக வயல்களில் எரியமும் காலகமும் குறைவாக இருக்கின்றன. எரியக் குறைவை எலும்பு மாவாலும் (Bone-meal) மேற்காடி எரிகையாலும் (Super phosphate) பூர்த்தி செய்து கொள்ளலாம். காலகக்குறைவை நீக்குதற்குக் காலகம் நேராகக் கிடைப்பதாகவுமிருக்கவேண்டும்; அதனைப் பயிர்கள் ஏற்றுக்கொள்ளக்

கூடியதாகவுமிருக்கவேண்டும். இது நவச்சிய கலப்புப் பொருள்களையும் (ammonium compounds) அல்லது சயனதையும் (Cyanamide) போன்று நவச்சார ஆவியை எளிதில் விடக்கூடிய கலப்புப்பொருள்களையும் பச்சைக் குழையுரத்தோடு நிலத்தில் சேர்ப்பதினாலேயே சாத்தியமாகக் கூடும்.

உரமிடுவதைப்பற்றிச்செய்துள்ளபரீட்சைகளின் முடிவை, கீழே கண்ட விதமாகக் குறிப்பிடலாம். பச்சைக்குழையுரத்தின் பலன் ஒன்றென்று வைத்துக்கொண்டால், உரமொன்றும் போடாத பொழுது 0.33 ஆகவும், எரிகை உரங்கள் மட்டும் போட்டால் 0.50 ஆகவும், காலகை உரங்கள் மட்டும் போட்டால் 0.70 ஆகவும், காலகைகளும் எரிகைகளும் போட்டால் 0.90 ஆகவும், பச்சைக்குழையுரமும் எரியமும் போட்டால் 1.20 ஆகவும், பச்சைக்குழையுரமும் காலகமும் போட்டால் 1.33 ஆகவும், பச்சைக்குழையும் காலகமும் எரியமும் போட்டால் 1.60 ஆகவும் கொள்ளலாம். இவற்றிலிருந்து காலகமும் எரியமும் உரமாக அவசியம் சேர்த்து வரவேண்டுமென்றும், என்றாலும் அவற்றைத் தனித்தனியாகவோ அவற்றை மட்டுமோ இடுவதைக் காட்டிலும் குழையோடு சேர்த்திடுவதே சிறந்ததென்றும் ஏற்படும்.

இந்த உரங்களை எவ்வளவெவ்வளவு சேர்க்கவேண்டுமென்பதையும் நாம் கவனிக்க வேண்டும். காலகம் ஐந்தில் இரண்டு பங்கு சேர்க்கையுரமாகவும் ஐந்தில் மூன்று பங்கு குழையாகவுமிருக்கலாம். குழையை யதிகப்படுத்துவதால், சேர்க்கை உரங்களையும் முக்கியமாகக் காலக உரங்களையும் பயன்படாதபடிக்கும் செய்துவிடும்.

(தொடரும்)

---

5. கூட்டுறவு :

தபசில் வகுப்பினருக்கேற்ற கூட்டுறவு.

பணக்காரருக்குக் கட்டடச் சங்கம் ஐயாயிரம் ஆறாயிரம் கடன் கொடுப்பதும் நில அடைமான பாங்கு ஆயிரம் இரண்டாயிரம் கடன் கொடுப்பதும் மற்றும் சாதாரண சங்கங்களும் நடப்புச் செலவுக்கென இருநூறு முந்நூறு கடன் கொடுப்பதும் பெரிய காரியமல்ல. அவர்களுக்குக் கடன் மற்றப்படிக்கும் தாராளமாகக் கிடைக்கும். 'வறியார்க் கொன்றீவதே ஈகை' யென்றபடி காலரை ரூபாவும் ஐந்து பத்தும் கடன் கிடையாதபடி திண்டாடுகிறவர்களுக்குக் கடன் கொடுத்துதவுவதே பேருதவியாகும். அப்படி இருபத்தைந்து ரூபாவுக்குட்பட்ட கடன்களாகக் கூட்டுறவியக்கக் கொடுக்கல் வாங்கலில் பதினைபிரத்திலொரு பங்கேனுமிருக்குமோ என்பது சந்தேகம்.

தபசில் வகுப்பினரில், நூறாயிரத்துக் கொருவரை,பணக்காரராகக்காண்பதும்அரிது. அவர்களினத்துக்குதவுவது,அதனிலும்அரிது. கூட்டுறவியக்கமேனும் அவர்களுக்குச் சரியாக உதவுகிறதாவென்றால், அதுவுமில்லை. அவர்களுக்கு சாதாரணமாகக் கடன் கொடுக்கக் கூடிய சம்பாத்திய மிச்சமிருப்பதில்லை. அவர்களுக்கு ஏகதேசம் சொந்தமாக இருக்கும் நிலங்களும் அவர்களுடைய குடியிருப்பு வீடுகளும் அதிகமாகப் பெறுவதுமில்லை. அவர்களுக்கு வீடுகள் நிலங்களின் பேரில் கடன் கொடுக்கும் சில கூட்டுறவுச் சங்கங்களும், கடனைச் சரிவர வசூலிக்க முடியாமல், சங்கடப்படவே செய்கின்றன. இப்படியாக, அவர்களுக்குக் கடன் கொடுக்கும் சங்கங்கள் அனேகமாகத் தாங்களும் கெட்டு அவர்களையும் கெடுத்துவிடுகின்றன.

நம் நாட்டில் ஒரு சிலரே சௌகரியமான நிலைமையி லிருக்கிறவர்களாகவும் அதனோடு குறைந்த சிரமத்தில் நிறைந்த வரவுடையவர்களாகவும் போதிய சாவகாசமும் நல்ல சக

வாசமுமுடையவர்களாகவும் அமைந்திருக்கின்றனர். அவர்களுக்கும் கீழாகப் படிப்படியாகச் சாவகாசமும் நல்ல சகவாசமும் குறைந்தும் இல்லாதொழிந்தும் அதுபோலவே, அதிக சிரமமான வேலைக்கும் குறைந்த வரவே பெறுகிறவர்களாகவும் பலர் இருந்துவருகின்றனர். அப்படியாக, மிகவும் தாழ்ந்த படியில் தபசில் வகுப்பினரே யிருந்து வருகின்றனர்.

வரவு மிஞ்சுதற்கிடமில்லாத நிலைமையில், வறுமையும் போதிய சாவகாசமும் நல்ல சகவாசமுமில்லாத நிலைமையில், விளக்கமின்மையும் எவருக்கும் அமைவது சகசமே! அப்படிப் பரம்பரையாக அமையப்பெற்றிருக்கும் தபசில் வகுப்பினர், பிற இனத்தார்கள் காலத்திற்கேற்பத் தத்தம் பரம்பரைத் தொழிலையும்விட்டு விருத்தியாகி வருவதைக் கண்ணாரக் கண்டும் தங்களுடைய பரம்பரைத்தாழ்வை யகற்றிக் கொள்ள விரும்பாதும், தங்களுக்குள்ளாகவே யிருக்கும் ஏற்றத் தாழ்வை அகற்றாதும், அவற்றிலும் முக்கியமாகத் தங்களுடைய பொருளாதார நிலைமையை விருத்தி செய்துகொள்ள வேண்டுமென்ற ஆசைகூட இல்லாதுமிருந்து வரும் நிலைமையில், தபசில் வகுப்பினர் தங்களுடைய கேவல நிலைமைக்குப் பிறரை மட்டும் காரணமாகச் சொல்லிவிட முடியாது. பிறரைக் குறை கூறிக்கொண்டிருப்பதாலும், தாங்கள் விருத்தியாகிவிட முடியாது.

எவரும் தத்தம் நிலைமையிலிருந்துகொண்டும் விருத்திக்கான காரியங்களைச் செய்துவருவதால் மட்டும் விருத்தியாகக் கூடுமேயன்றித் தன்னையோ பிறரையோ நொந்துகொள்ளுவதால் மட்டும் விருத்தியாகிவிட முடியாது. அப்படி நொந்துகொள்வது விருத்திக்கிடைஞ்சலாகவும் பிறர் கூட்டுறவிற்குப் பாதகமாகவும் முடியக்கூடும்.

தபசில் வகுப்பினரின் முன்னேற்றம் சம்பந்தமாக, அரசாங்கமும், நாட்டுத் தலைவர்களும் வகுப்புத் தலைவர்களும் திட்டமொன்றேற்படுத்தி அதன்படி வேலைசெய்துவரவேண்டும்; தபசில் வகுப்புத் தம்பதித் தொண்டர்களே அப்படி வேலைசெய்துவருவதும் உசிதமாகும். என்றாலும், மேலே சொல்லியபடி திட்டம் இல்லாத காரணமாகவேனும் தம்பதித் தொண்டர்கள் அமைவதற்கில்லாத காரணமாகவேனும் தபசில் வகுப்பினர் முன்னேற்ற வேலைகளைச் செய்யாதிருப்பதும் நியாயமாகாது. அரசாங்கத்தை அரசியல் எதிர்க்கட்சியினரைப் பத்திரிகைகளிலும் மேடைகளிலும் தாக்கிப் பேசுவது நாட்டுப் பற்றாகிவிடமாட்டாது. நம்முடைய நிலைமை எவ்வாறாக இருப்பினும் நம் நாட்டினர் அனைவரும் நல்ல நிலைமையிலிருக்க வேண்டுமென்று ஆசைப்படுவதோடு நின்று போகாமல், அப்படியில்லாததற்காகக் கவலைப்படுவதும் அக் குறைவை நீக்குவதற்காக நம்மாலியன்ற முயற்சிகளெல்லாம் செய்வதுமே நாட்டுப் பற்றாகும். மனவீதியுண்டானால் இடவீதியுமுண்டு. நமக்கு எவ்வளவுதான் வேலை நெருக்கடியிருப்பினும் அதற்கிடையிலும் நாம் சாவகாசத்தைப் பெருக்கிக்கொண்டு நாமுதவக் கூடிய நம் நாட்டாருக்கெல்லாம் உதவி வருவதே உண்மை நாட்டுப்பற்றாகும். ஆகையால், நாமொவ்வொருவரும் தபசில் வகுப்பினரோடு உறவாடி அவர்களுடைய சமூக நிலைமையையும் பொருளாதார நிலைமையையும் உயர்த்தி வரவேண்டும்.

நாம் நம்முடைய ஊரில் அல்லது பக்கத்துக் கிராமத்தில் உள்ள தபசில் வகுப்பினர் குடும்பங்களின் நிலைமையை நன்றாகத் தெரியவேண்டும். அவற்றை எவ்வாறெல்லாம் உயர்த்தலாமென்பதையும் நன்கு ஆராய்ந்தறியவேண்டும். அவர்களை முதலாவதாக உற்சாகப்படுத்திவர வேண்டும். அவர்களில் வேலையில்லாதிருப்பவர்களுக்கு வேலையும் வாங்கித் தரவேண்டும்; சோம்பி இருப்பவர்களையும் நன்றாக வேலை செய்துவரும்படி தூண்டவேண்டும். அவர்களுக்கு நல்ல கூலி கிடைக்கச் செய்யவேண்டும். உண்ண வட்டிலும் குடிக்கச் செம்பும் தண்ணீரெடுக்கச் செப்புக்குடமு மில்லாதவர்களையும் வாரம் ஓரணாச் சீட்டாவது போட்டு வரச் சொல்லி அவற்றை வாங்கிக்கொள்ளத் தூண்டவேண்டும். அதுபோலவே, இரண்ட

ளுச்சீட்டாவதுபோட்டுவரச்சொல்லித்திரிகை உரம் வாங்கிக்கொள்ளவும் கோழிகள் வாங்கி வளர்த்துவரவும் தூண்டவேண்டும். நல்வாழ்க்கைக் கூட்டுறவுச் சங்கமொன் றேற்படுத்தி அதில் ஒவ்வொருவரும் அங்கத்தினராகச் சேரவும் அற்றைக்கூலிக்காரர் வாரம் ஒருமுறையும் மாதச் சம்பளக்காரர் மற்றும் உரொக்க வரும்படிக்காரர் மாதமொருமுறையும் மற்றும் விவசாயிகள் ஆறு மாதத்துக் கொருமுறையும் தங்களாலியன்ற அளவு இருப்புக் கட்டிவரும் படியான கட்டாயமிருக்கவேண்டும். வாரந் தோறும் கட்டிவருகிறவர்கள் ஆறு வாரத்திற் கிடையிலும் மாதந்தோறும் கட்டிவருகிறவர்கள் ஆறு மாதத்திற் கிடையிலும் ஆறு மாதத்திற்கொரு தடவை கட்டிவருகிறவர்கள் மூன்று வருடத்திற் கிடையிலும் அவற்றின் பேரில் கடனும் வாங்கக்கூடாதென்றிருக்க வேண்டும். அவர்களில், ஆடுகள் வளர்க்கக்கூடியவர்களைக் கால் ரூபாச் சீட்டேனும் செலுத்திவரச்சொல்லி ஆடும், 2 ரூபாச் சீட்டுத் தொகையிலிருந்து எருமையும் வாங்கி வளர்க்கச் சொல்லவேண்டும். பால், தயிர், நெய் இவற்றை விற்றுத் தரவும் உதவவேண்டும். கூலி வேலை செய்யக் கூடியவர்கள் மிகுதியாக இருந்தால், அரசாங்கம் தலதாபனம் மற்றும் பொதுத் தாபனங்களுடைய மண் வேலை மராமத்து வேலைகளை நம்முடைய பொறுப்பில் அவர்களுக்குச் சங்கத்தின்மூலம் வாங்கித் தரவும் வேண்டும். நல்ல கூலியும் அவர்களுக்குக் கொடுத்து வருவதோடு கிடைக்கிற இலாபத்தில் பெரும் பாகத்தையும் சங்கத்திலொரு நிதியாகச் சேர்த்து வரவேண்டும். குச்சுகளிலும் கூரை வீடுகளிலும் குடியிருப்பவர்களுக்குச் சிறு வீடாயினும் நல்ல காற்றோட்டமும் வெளிச்சமுமிருக்கும் படியாகக் கட்டிக்கொள்ளுவதற்கான உதவியும் செய்யவேண்டும். பிள்ளைகள் விளையாடுவதற்கான பொதுவிடமும் சௌகரியப்படுத்திக் கொள்ளத் தூண்டவேண்டும். பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கனுப்பவும் தூண்ட வேண்டும். படிப்பில்லாத முதியோருக்கும் படிப்புச் சொல்லிவைக்கவேண்டும். படிப்பினை நிறைந்த சிறு நாடகங்களும் அவர்களுடைய பிள்ளைகளைக்கொண்டே நடத்திவரவேண்டும். கெட்ட பழக்க வழக்கங்களையும் கொஞ்சங் கொஞ்சமாகவேனும் விட்டுவிடும்படி செய்யவேண்டும். இவற்றை யெல்லாம் கூடியவரை அவர்களாகவே செய்து (Self-help) கொள்ளவும் அவர்களுக்குள்ளாகவே ஒருவருக்கொருவர் செய்து கொள்ளவு (Mutual help) மாகப் பயிற்றிவர வேண்டும். தீராதென்றிருக்கும் அளவிற்கே, பிறருதவி வரவேண்டும். அவர்களுடைய சங்க இருப்புத்தொகைகளை அவர்களிலெவரும் கையில் வைத்துக் கொள்ளாமல் பாங்கில் போட்டுவர வேண்டும். சங்கப் பெயரால் அவர்கள் பாங்கில் கடன் வாங்குவதென்பதுங் கூடாது. நிலங் கரைகளில்லாதவர்களுக்குத் தறகாஸ்திலும் வாரத்திற்கும் நிலங்கள் வாங்கித் தரவேண்டும். கட்டடத்திற்காக அரசாங்கத்தில் கடன் வாங்குவதென்றாலும் விவசாயச் செலவுகளுக்கு அற்ப சொற்பம் தங்கள் சங்கத்திலேயே கடன் வாங்குவதென்றாலும் அவர்கள் மிச்சத்திலிருந்தே அல்லது வருட மிச்சத்திற்குத் தக்கதாகக் குறைந்த அளவே கடன் வாங்குவதென்றுமிருக்கவேண்டும். அவர்களுக்குள் ஏற்படும் விவகாரங்களையும் அவர்களாகவே தீர்த்துக் கொள்ளவேண்டும். அவர்களுக்காகத் தம் சொந்தத்திலிருந்து முன் பணமுங்கட்டி அவர்களுக்கு வேலை வாங்கித் தருகிறவர்களில் இரண்டொருவர் அவர்கள் சங்க நிருவாகத்திலும் முக்கியப் பங்கெடுத்துக் கொள்ளலாம். இப்படியாக, அவர்களுடைய பொருளாதார நிலைமையைத் திருத்தி வருவதோடு அவர்களுடைய நாணயத்தையும் யோக்கியதையையும் கொஞ்சங் கொஞ்சமாகவேனும் அவர்களைக்கொண்டே திருத்தியும் கூடுமளவிற்கு அவர்களாகவே திருந்தியும் வரவேண்டும். அவர்களுடைய காரியங்களை அவர்களாகவே செய்து கொள்ளக்கூடிய பொழுது பிற இனத்தாருடைய கலப்பும் நின்றிடவேண்டும். எந்தக் காலத்திலும் இனத்தைத் திருத்தும் வேலைகளில் குடி நிறுத்தமும் நடைப் பிசகுத் திருத்தமும் எடுத்துக்கொள்ளவே கூடாது; அதுவும், ஆரம்பத்திலெடுத்துக்

கொள்ளவே கூடாது. அவையெல்லாம் தானுகவே காலஞ் செல்லச் செல்லக் கூடிய அளவிற்குத் திருந்திவிடவுங்கூடும். அவற்றைத் திருத்துவதே முக்கிய வேலையாகக் கொண்டால், அவற்றையும் திருத்திவிட முடியாது போகும்; மற்றும் செய்யக்கூடிய வேலைகளும் தடைபட்டுவிடும்.

இப்படியாக, நம் முறைவைக் கூட்டாக அவர்களுக்குப் பயன்படச் செய்வதே உசிதமென நாம் நினைக்கிறோம். அப்படியே பல இடங்களிலும் வேலை செய்யக் கருதிப் பரீட்சார்த்தமாக ஓரிடத்திற்கு ஒரு சங்கம் பதிவு செய்து தரவும் கேட்டோம். தபசில் வகுப்பினரைத் திருத்துவது சிரமமான வேலையென்றாலும் பாங்கிலேனும் பிறரிடமேனும் கடன் வாங்கி அவர்களிடம் கொடுத்துவராத நிலைமையிலும் அவர்கள் வேலையில்லாமல் சோம்பித் திரியாதபடி வேலை கொடுத்தும் மிச்சம் சேர்த்துவர உதவியும் வருகிற நிலைமையிலும் எவருக்கும் கெடுதலிருக்கக்கூடியதில்லையென்றும் நடக்கும் அளவிற்கு அவர்கள் திட்டமாக விருத்தியடையக்கூடுமென்றும், கூட்டுறவுப் பதிவாளருக்கு, எடுத்தும் காட்டினோம். என்றாலும், அப்படி ஒரு சங்கம் பதிவு செய்துதர அவருக்கு மனம் வரவில்லை. வேறின்னமாதிரியானால், பதிவு செய்து தருகிறோமென்றும் சொன்னாரில்லை. அரசாங்கம் தபசில் வகுப்பினரிடம் காட்டிவரும் அனுதாபத்தை அவருடைய செய்கையை மட்டும் வைத்து நாம் குறை கூறிவிடக்கூடாது. நமக்குச் சாமி வரங் கொடுத்தாலும், பூசாரி தயவும் வேண்டுமல்லவா?

---

6. கல்வி :

ஆரம்பப் பள்ளிப் பாடத்திட்டக் குறிப்புக்கள்

(சாரம் VI)

தேகப்பயிற்சி

அ. நோக்கம்

உடலுறுப்புக்களின் விருத்தியும் வளர்ச்சியும், உடம்புக்குத் திடமும் பலமும் ஏற்றலும், சுகத்தைப் பேணுதலும், நிமிர்ந்து கெம்பீரமாக நடக்கப்பழகுதலும், நரம்புகளும் தசைகளும் திட்டமாகவும் அழகாகவும் அசையும்படி பழக்கி வைத்தலும், சமூகத்துக்குக் கட்டுப்பட்டுக் கீழ்ப்படிதல், சமூகத்தோடு ஒத்துழைத்தல், விசுவாசம் தலைமைபெருந்தன்மை முதலிய பெருமித குணங்களை வளர்த்தலும், முறையான சுகாதாரப் பழக்கங்களும் தேகாப்பியாசங்களும் விளையாட்டுப் பயிற்சிகளுமே தேகப் பயிற்சியின் நோக்கங்களாகும்.

ஆ. போத விதிகளும் உபகரணங்களும்

ஆரம்பப் பள்ளியில் கீழ்தர வகுப்புகளுக்கேற்ற முயற்சிகளும் உயர்தர வகுப்புப் பெண்களுக்கு வேறு முயற்சிகளும் பாடத்திட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆசிரியர் பாடத்திட்டத்திற்கு அடிமையாகவோ கிளிப்பிள்ளையைப் போலவோ அதனை அனுசரிக்க வேண்டியதில்லை. அதனைத் தனக்கு ஒரு துணையாக வைத்துக்கொண்டு மாணவர்களுடைய தன்மைக்கும் தேவைக்கும் தக்கதாக மாற்றியும் தன்னேக்கம் வெற்றிகரமாக முடியச்செய்ய வேண்டியதுதான் அவர் கருத்தாக இருக்க வேண்டும். ஆரம்ப வகுப்புக்களில் குழந்தைகளுடைய தேவையும் ஆசையும் சுறுசுறுப்பாக இருப்பதேயாகும். அவர்களுடைய மகிழ்ச்சிக்கு முக்கிய காரணம் பலவேறு வகை முயற்சிகளைப் பொறுத்ததாகவே யிருக்கும்; அவற்றின் பயனைப்பொறுத்ததாகக்கூட இராது. அவர்களுக்கு எதிலும் அக்கறை இருப்பது சொற்ப நேரம்; களைப்பும் விரைவாகவந்துவிடும்; ஆனால் அவர்களுடைய முயற்சிகளையும் அவற்றின் அளவையும் மாற்றிக்கொண்டே யிருந்தால், அதிக

நேரமும் விளையாடச்செய்யலாம். இந்தத் தத்துவத்தை யனுசரித்தே பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சௌகரியங்களும் உபகரணங்களும் ஆரம்பப் பள்ளியில் அமைக்கப்பட வேண்டும். ஆனால் உபகரணங்கள் ஒரு உயர்ந்த தரமாக, மாதிரியாக அல்லது திட்டவட்டமான அளவுப்படி இருக்கவேண்டுமென்பதாவது அதிகச் செலவிலேயே அமையக்கூடியதாக இருக்க வேண்டுமென்பதாவது இல்லை. வேண்டாத பழைய தட்டு முட்டுகளைக்கொண்டும் உள்ளூர் ஆசாரியை வைத்தும் பள்ளிக்கூடத்தை நிர்வகிக்கிறவர்களோ (Manager) அல்லது பள்ளியாசிரியரோ தமக்கு வேண்டியனவற்றை யெல்லாம் செய்து கொள்ளலாம். உபயோகமில்லாத பெஞ்சுகளின் கால்களையும் அறுத்தெடுத்துக் கொள்ளலாம். ஒடிந்த நாற்காலிகளையும்உட்காரும்பலகைமுதலியவைகளையும்ஊஞ்சல்களுக்காகச்சிறு அளவாக அறுத்தெடுத்துக்கொள்ளலாம். பனந்தூறுகளும் கயிறுகளும் கிராமங்களில் சௌக்கியமாகக் கிடைக்கக்கூடும். சவுக்குப்போல்கள் அனேக சில்லாக்களிலும் மூங்கில் சிலசில்லாக்களிலும் எளிதாகக் கிடைக்கக்கூடும். கயிறுகளைக்கொண்டு தொங்கும் அல்லது ஏறும் உபகரணங்களாகவும் ஆக்கிக்கொள்ளலாம். போதனா முறைப்பள்ளிகளிலுள்ள மாணவ ஆசிரியர்களும் கிராமஆசிரியர்களும் பட்டினக்கரைகளிலுள்ள உபகரணங்கள் நிறைந்த பெரிய பள்ளிக்கூடங்களுக்குப் போகும் பொழுது அங்குள்ள உபகரணப் பொருள்களை அளந்தும் மாதிரி குறித்தும் வந்தால் தங்களூரிலேயே அவற்றைச் செய்து கொள்ளவுங் கூடும். மட்டமாக நிற்கும் கட்டைகளும் (Horizontal Bars) ஒரு போகுக் கட்டைகளும் (Parallel Bars) செய்ய அதிகச் செலவும் ஆகக்கூடும். ஆனால் அவை உயர்தரப் பள்ளிகளுக்குத்தான் அவசியமாயிருக்குமாதலால், அவற்றை அவை தயாரித்துக்கொள்ளவும் கூடும். அவற்றைப் பள்ளிக்கூடத்திற்கும் கிராமத்திற்கும் பொதுவாக வைத்துக் கொள்ளலாமென்றாலும், அதிகத் திடமான துடுக்கான வாலிபர்கள் பள்ளிப் பிள்ளைகளுக்கு இடம் கொடுக்காமலும் அவர்களை விரட்டிவிடக் கூடும். ஆனால், பள்ளி ஆசிரியர்கள் முறைபோட்டு விளையாட்டிடத்திலிருந்து வருவார்களென்றால் இந்தச் சங்கடம் நேராது.

இ. கதைகள் நடித்தலும், நாடகமும்

கீழ்தர ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்குப் பிறரைப்போல் நடிக்கவும் நாடகம் போடவும் மிகுந்த ஆசை இருக்கிறது. அவர்கள் குதிரைகளைப் போலப் பாய்வார்கள்; பறவைகளைப்போலப் பறப்பார்கள்; காற்றுப்போல இரைவார்கள்; மரங்களைப்போல அசைவார்கள்—எல்லாம் வேடிக்கைக்காக. அவர்கள் வாழ்கிற வாழ்க்கையையே நாடகமாக நடிப்பார்கள். வீட்டு வேலை, பண்ணை பாட்டம், கடை, கட்டடம், வேட்டை முதலியனவற்றையும் ஓடும் புகை வண்டி, பட்டாளப் பிரயாணம், சர்க்கசு (Circus) விளையாட்டுக்கள், திருவிழாக்கள் முதலியனவற்றையும் நடிப்பார்கள். பத்துப் பன்னிரண்டு வயதுகளுக்கிடையிட்ட பையன்களுக்கு நாடகங்கள் நடிப்பதில் மிகுந்த பிரியமிருக்கும். பையன்கள் ஆசிரியராக, போலீசுக்காரனாக, சிப்பாயாக, வேட்டைக்காரனாக விளையாடுவதிலும் மிகவும் பிரியப்படுவார்கள். பெண் குழந்தைகள் வீடுகளில் பெரிய பெண்கள் வேலை செய்கிற மாதிரியாயும், பள்ளிக்கூடமும் வீடும் கட்டியும் பொம்மைகள் வைத்தும் விளையாடுவார்கள். மாணவர்களுக்கு ஆசிரியர் கொடுக்கும் வேலையும் இந்தப்போக்குகளை யனுசரித்ததாக இருக்கவேண்டும். பாடத்திட்டத்தில் சில மாதிரிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையும் கவனித்து ஆசிரியர் தம் யுக்தியாகக் குழந்தைகளுக்கு மிகுந்த அக்கறையைக் கொடுக்கக்கூடியதான முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.

(தொடரும்)

பத்திரிகை படியாத தேசம் விர்த்தியடைய முயல்வது வீண் பிரயாசம்

உனக்கு உன் பிள்ளைகள் பேரில் பிரியமிருக்கிறதா?

M. M. E.

இந்தக் கேள்வியை எந்தத் தாயிடம் கேட்டாலும், அவள் கோபித்துக்கொள்ளுவாள். அப்படிக் கோபித்துக்கொள்ளக் காரணமுண்டு. ஆனால், 'அவள் பிரியமாயிருக்கிறது, அவள் பிள்ளைக்குத் தெரியுமா?' என்றுதான் நான் கேட்கிறேன்.

செய்கைக்கு மூலாதாரமான வார்த்தைகளாலும் பிள்ளைகள் மகிழக்கூடும். அனேகமாக, தாய்மார்கள் தாங்கள் பிரியமாயிருக்கிறதாகப் பிள்ளைகளிடம் சொல்லுவது மில்லை; அப்படி நம்பும்படி செய்வது மில்லை. அப்படியிருக்கும் பொழுது தாய்க்கிருக்கும் பிரியத்தை, பிள்ளை எப்படித் தெரிய முடியும்? தாயானவள், தன் வார்த்தைகளாலும் செய்கைகளாலும், தான் பிரியமாயிருக்கிறதைக் காட்டிக்கொள்ள வேண்டாமா?

பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளில், சிலரை வெறுப்பதுமுண்டு. பெற்றோர்களும் மனிதர்கள்தானே? அவர்கள் அப்படி விகற்பமாகப் பழகி வருவதற்குப் பல காரணங்களிருக்கலாம். ஆணாக அல்லது பெண்ணாகப் பிறக்க வேண்டுமென்று ஆசையோடிருக்க, அதற்கு மாறாகப் பிறந்திருப்பதும், கெட்டிக்காரப் பிள்ளையாக இருக்கவேண்டுமென்று எண்ணியிருக்க முட்டாள் பிள்ளையாக இருப்பதும், பெற்றோர்களுக்கு அடங்கியொடுங்கி வளராமல் சேட்டைக்காரப் பிள்ளையாக வளர்ந்து வருவதும், தனக்குப் பிடியாதவர்களுடைய முகச்சாயலை அது ஒத்திருப்பதும் அதன் போக்குகள் சில பிடியாதிருப்பதும் இவையெல்லாம் பெற்றோரின் பிரியத்தின் தன்மையையும் அளவையும் மாற்றக் கூடியனவாகும். (தமக்குப் பிடியாதவருடைய பெயர் வைத்திருந்தாலுங்கூட, அந்தப் பிள்ளையும் பிடியாது போகலாம். ப-ர்)

தங்களுடைய பிள்ளைகளை அதிகாரம் செய்யப் பெற்றோர்கள் (அதுவும் பிறர திகாரத்தால் தாம் வெகுவாக அவதிப்பட்டிருந்தால், படுகிறதாயிருந்தால்...ப-ர்) விரும்புவதியல்பே. அவர்கள் தங்களுடைய பிள்ளைகள் தங்களிடத்தில் பிரியமாயிருக்கவேண்டுமென்றும் தங்களுக்கும் மரியாதை செலுத்தவேண்டுமென்றும் ஆசைப்படுகிறார்கள். பிள்ளைகள் அவர்களை மீறியும் மரியாதைக் குறைவாகவும் நடந்துகொள்ளும்பொழுது வேறொருவர் அப்படிச் செய்தால் எப்படி அவர்களைத் தாக்குவார்களோ அப்படியே தங்கள் பிள்ளைகளையும் (அதிகமாகக்கூட ப-ர்) தாக்குகிறார்கள். பிள்ளைகளுடைய சபலமோ விரும்பத்தகாத போக்கையே விருத்தி செய்து வருகிறது; அனேகமாக வெறுப்பிலும் முடிகிறது.

தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை வெறுப்பதற்குக் காரணங்கள் மேலே சொல்லியவை எவையும் இல்லாதிருந்தாலும், அவர்களுடைய பிள்ளைகள் பேரில் அவர்கள் உண்மையாகவே பிரியமாயிருந்தாலும், அது அவர்களுடைய பிள்ளைகளுக்குத் தெரியுமா? அவர்கள் செய்கிற நல்ல காரியங்களை யெல்லாம் மறந்து அவர்கள் செய்கிற தவறுக்காக அவர்களைக் கோபிக்கும்பொழுதும், அவர்கள் என்ன ஏது வென்று துளைத்துத் துளைத்துக் கேட்பதற்கும் அவர்களுக்கு அடிகளை விழும்பொழுதும், வீக்க தூக்கம் பாராமல் எதற்கும் அவர்களைத் தண்டிக்கும் பொழுதும், அவர்கள் உண்ணும் பொழுது உண்ணுவதானால் உண்ணு அல்லது எழுந்திருந்து போவென்று வெறுப்பாகப் பேசும் பொழுதும், அவர்கள் தூங்க விரும்பினாலும் சரி விரும்பா விட்டாலும் சரி அவர்களைக் கட்டிச் சுருட்டிப் படுக்கையில் போட்டுத் தூங்கச் சொல்லும் பொழுதும், தங்கள் தாய்

தங்கள் பேரில் பிரியமாயிருப்பதால்தான், இப்படியெல்லாம் செய்கிறாளென்று அவர்களால் நினைக்க முடியாதிருந்தால், அவர்களை மன்னிக்க வேண்டியதுதானே !

தாயானவள் பிரமிக்கும்படியாகவும் பிள்ளைகள் நடந்துகொள்ளுகின்றனவே யென்றால், அவர்களிடத்தில் தங்கள் தாய் பிரியமாயிருக்க வில்லை யென்று எண்ணம் ஊறிப் போயிருப்பதாகத் தானே அருத்தமாகும்? அவர்களிடம் பல தடவை அவர்கள் நல்லவர்களாக இருந்தால் தானும் அவர்கள் பேரில் பிரியமாயிருப்பதாக அந்தத் தாய் சொல்லியிருக்கலாம். ஆனால், அது போதாது. அது அவர்களை நல்லவர்களா யிருக்கத் தூண்டவும் செய்யாது. அது அவர்களை நல்லவர்களாக இல்லாதிருக்கும்படிக்கும் செய்துவிடும். தாயினுடைய பிரியத்திற்காக அவர்கள் நல்லவர்களாக இருக்கமுடியாது; அவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் எப்படி நடந்து கொண்டாலும், தாயானவள் அவர்களிடத்தில் பிரியமாய்த்தான் இருக்க வேண்டும். (தாய் நல்லவளாக இருந்தால், பிள்ளையும் அவள் மாதிரியைத் தானாகப் பின்பற்றிக்கொள்ளுமே! தான் எப்படி யிருந்தாலும், பிள்ளை சரியாக இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கும் பொழுதுதான், சங்கடம் விளைகிறது. ப—ர்.)

எனக்கொரு தாயாரைத் தெரியும். அவளுக்கு ஒரே ஒரு மகள். அந்த மகள் தன் தாயாருக்கு ஓயாது தொந்தரவே கொடுத்துக் கொண்டிருப்பாள். அவளுக்கு என்னவெல்லாம் தாய் செய்து வந்தாலும், தாய் தன் பேரில் பிரியமாயிருக்கும்படியாக அவள் நடந்து கொள்வது மில்லை; அவளுக்கும் தாய் பேரில் பிரியம் கிடையாது. தாயென்ன சொன்னாலும் சரி அதை அலட்சியம் செய்வதிலும் கேளாதிருப்பதிலும் மகிழ்ச்சி கொள்வதும் அவள் சுபாவமாக இருந்தது. விரைவாகச் செய்யச் சொல்வதை மெதுவாகவே செய்வது, எதற்கெடுத்தாலும் திண்டுக்கு முண்டு பேசுவது செய்வது, உணவு எவ்வளவு உருசியாகச் செய்து வைத்திருந்த போதிலும் உண்ண முடியாதென்று கோப மூட்டுவது, இப்படியாக எந்நேரம் பார்த்தாலும் வீட்டில் தாயும் மகளும் கீரியும் பாம்பும் போலவே யிருந்து வந்தார்கள். அடிக்கடி இருவரும் இரைவதும் ஒருவரை யொருவர் முறைத்துப் பார்ப்பதும் அதிகாரம் பண்ணுவது மாகவேயிருந்து வந்தார்கள் சில சமையங்களில் அந்தத்தாய் என்னிடம் சொல்லியிருக்கிறாள். தன் மகளை வெறுக்கவுங்கூடச் செய்வாளாம்.

அதைச் செய் இதைச்செய் அப்படிச் செய் இப்படிச் செய் யென்று அதிகாரம் பண்ணாமல், நீ புத்திசாலிப் பிள்ளையாயிற்றே. கெட்டிக்காரப் பிள்ளையாயிற்றே, உனக்குத் தெரியாததா வென்று மகளை இணக்கியே மகளோடு பழகிப் பாரென்று, அந்தத் தாயாருக்குச் சொன்னேன். தாயினுடைய உண்மையான அன்பை உண்மையாகக் காணும் எந்தப் பிள்ளையும் அவளை மீறவா செய்யும்? சில நாட்களுக்குப் பின் அந்தத் தாயாரை நான் பார்த்த பொழுது, நாங்களிருவரும் இப்பொழுது ஒருவரை யொருவர் தெரிந்து கொண்டிருக்கிறோம். எங்களுக்குள் வெறுப்பாவது கசப்பாவது இப்பொழுதில்லை யென்று சொன்னாள். (வயது வந்த தாயே தன் பிள்ளையைச் சரியாக அறிந்துகொள்ளாமல் அதனைத் துன்புறுத்தும் பொழுது அதனோடு வாதாடும் பொழுது அந்தப் பிள்ளை தாயை எப்படிச் சரியாகத் தெரிந்துகொள்ள முடியும்? ப—ர்)

பிள்ளைகளின் குறைகளைத் தெரியாது, அவற்றைத் திருத்தக்கூடிய முறையாக நடந்து கொள்ளாமல், தாய் நடக்கிறபொழுது தன் பேரில் தாய்க்குப் பிரியமேயில்லையென்று பிள்ளையும் நினைக்கிறது. தாயன்பும் அந்தப் பிள்ளைக்கில்லாது போகிறது. அந்த அன்பேயில்லாதபொழுது, அந்தப் பிள்ளைக்கு அழகும் சத்தியும் தன்னம்பிக்கையும் இல்லாது போகின்றன. தான் எப்படி யிருந்தாலும்

என்ன செய்தாலும் தாயன்பு இருக்குமென்று தெரிந்தால், அழகும் சக்தியும் தன்னம்பிக்கையும் எல்லாம் அந்தப் பிள்ளைக்கு வந்து சேரவே செய்யும்.

பிள்ளைமேல் பிரியமாயிருப்பதைச் சொல்லிக்கொண்டாயிருக்கவேண்டும்? தாயானவள் வேறு எப்படித்தானிருக்கமுடியும்? அப்படித் தானிருக்கிறுளென்று ஏன் பிள்ளை நினைத்துக் கொள்ளக்கூடாது? வேண்டும் உணவூட்டுகிறோம், துணி மணிகளைத் தருகிறோம், படிக்க வைக்கிறோம், மற்றும் வேண்டியனவெல்லாம் செய்கிறோமென்று தாயானவள் நினைக்கலாம், சொல்லலாம். ஆனால், இவையெல்லாம் விசேடப்பிரியமிருப்பதாகக் காட்டுமா?

தாய்தான் பிரியமாயிருக்கிறதாயிற்றே! அவளுக்குப் பிள்ளையைப் பிடியாதபொழுது, அதனைப் பிடியாததாகவும் அது வெட்கப்படும்படியாகவும் கேவலமடையும்படியாகவும் அதன் பேரில் சூடான வார்த்தைகளைச் சரமாரியாகப் பெய்வானேன்? அதுபோல, அன்பான வார்த்தைகளையும் ஏற்ற சமையங்களில் ஏன் பொழியக்கூடாது?

எந்தத் தாயும் அன்பே பொழிந்து தன் பிள்ளையைக் கெடுத்துவிடவும் கூடாது. ஆனால் அதற்கு எதிர்மாறாக நடந்து கொள்வதும் பிள்ளைக்குத் தீங்கே விளைவிக்கும். சிறு பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் தங்களுடைய அன்பை வெளிப்படையாகச் சொல்லியும் காட்டியுந்தா ளுகவேண்டும். அவர்கள் தாங்களாக அதனைத் தெரிந்துகொள்ளக்கூடியதில்லை. அவர்கள் தவறியபொழுதும் அன்பான வார்த்தைகளால் அவர்களைத் திருத்திவிடவுங் கூடும். அப்படித் திருத்துவதால், அவர்களிடத்தில் தன்னம்பிக்கையும் வளரக்கூடும்.

Social Welfare.

ஆ. நாட்டுவைத்தியம் மிருகவாகடம் பாகமுறை வாழ்க்கைக் குறிப்புக்கள்.

அறைக் கீரை

தளர்ந்தவர்க்கும் பாலருக்கும் தக்கவயதோர்க்கும்
இளங்கீரை நாவுக் கிதமாம்—கிளம்பு
சுரகாசம் போக்கும் தொடர்பசியுண் டாக்கும்
பிரகாச மாயெடுத்துப் பேசு.

அகத்தியர் குணவாகடம்.

இதனைச் சமையல் செய்துண்ண நாவிற்கு உருசியைத் தரும். வெப்ப சுரத்தைத் தணிக்கும். நல்ல பசியைக் கொடுக்கும்.

II 1. அம்மை வைக்கும் முறையைச் சென்னர் (Jenner) கண்டுபிடித்தது முதற்கொண்டு மேல் நாட்டார் கையாடி வருகிறார்கள். ஆதலால், சென்ற நூறு வருடங்களிலே வைசூரியால் இறந்தவர்களின் தொகை மேல் நாடுகளில் மிகவும் குறைந்துபோயிருக்கிறது. பிலிப்பைன் தீவுகளின் தலைநகரமாகிய மனிலா வென்னும் இடத்தைச் சுற்றிய பிரதேசத்தில், வைசூரியைத் தடுக்கும் முறையாகிய அம்மை வைத்தலைப்பற்றி அதிகாரிகள் முன்னே அதிக கவனம் எடுத்துக் கொள்ளாமலிருந்தார்கள். ஆதலால், வருடத்துக்கு, 6000 பேர்களுக்குக் குறையாத சனங்கள் வைசூரியால் மடிந்தார்கள். பிறகு ஒவ்வொருவரும் அம்மை வைத்துக் கொள்ளவேண்டும் என்று கட்டாயப்படுத்தினதின் காரணமாக, அந்தப் பிரதேசத்தில் வருடத்துக்கு ஒரு மரணம் கூட வைசூரியால் ஏற்படவில்லை.

நல்வழி.

2. கிழக்கு இராசபுதன சங்கீத வித்துவான்கள் (சென்ற வருடம் கூடிய ப-ர்.) மகாநாட்டில், மாமிசம் சாப்பிடுவதால் சங்கீத வித்துவான்களின் குரல் கெடுவதாகவும், இனிமையாகப் பாடும் பறவைகள் சாகபட்சிணிகளாகவே யிருப்பதாகவும், கழுகு காகம் முதலியன

மாமிசம் சாப்பிடுவதால் கடுமையான குரலில் கத்துவதாகவும், ஆகவே சங்கீத வித்துவான்கள் மரக்கறியுணவு கொள்வதே சரியென்றும் ஒரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

நல்வழி.

3. நமக்கு வயதாக ஆக, நம் மூளையும், தலையுடன் வளருகிறது; ஆனால் அதற்குத் தக்கபடி புத்திசாலித்தனம் (Intelligence) வளருவதில்லை. நம் மூளை அப்படி ஐம்பதறுபது வயது வரை வளரும்; மூக்கும், காதுகளும் அதேமாதிரிதான்.

நம் மூளையினடியில் பிட்டுயிட்டரி (pituitary) என்ற ஒரு சுரப்பி இருக்கிறது. இதிலிருந்து சுரக்கிற இரசாயனப் பொருளையே பொறுத்தது நம் வளர்ச்சி. அவை அளவுக்கு மிஞ்சிச் சுரந்தால், நாம் அதிக நெட்டையாகவோ தூலமாகவோ அல்லது நெட்டையும் தூலமுமாகவோ வளர்வோம்.

நல்வழி.

III. பாலில் வெண்ணெய் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. கன்று போட்டதும் இருக்கும் வெண்ணெய், பின் 7-8 வாரங்கள் வரை குறைந்தே வரும்; பிறகு கொஞ்சங் கொஞ்சமாகக் கூடி வரும். பொதுவாக, பால் இருப்பதற்குத் தக்கதாக, வெண்ணெய் குறையும். ஒரே நாளில், காலையில் மூன்றிலொரு பங்கு முதல் அரைவாசி வரை மாலைப் பாலைக் காட்டிலும் அதிகமிருக்கும். வெண்ணெய் உண்டாவதில் வித்தியாசமில்லை யென்றாலும் மாலைப் பாலில் வெண்ணெய் குறைவாகத் தெரியும். இரவில், வெண்ணெய் தவிர்த்த கனப்பொருள்கள் (Solids not fat) பகலில் உண்டாவதிலும் அதிகமாக உண்டாகிறது. இந்தக் கனப்பொருள்கள் அதிகத் தண்ணீரை இழுத்துக் கொள்ளுகின்றன.

Indian Farming.

IV. சாதாரணமாக, காணத்தைக் கேவலமாக நினைக்கின்றனர்; ஆனால், அதுவும் ஒரு நல்ல சத்துள்ள பயறாகும்; முளை கிளம்பியதும் மிகுந்த சத்துள்ள பயறுமாகி விடுகிறது.

சில பையன்களுக்கு மோரும் சில பையன்களுக்குக் காணமும் மத்தியான ஆகாரமாக ஆறுமாதம் கொடுத்து வந்து பரீட்சிக்கப்பட்டனர். அவ்வித விசேட ஆகாரம் ஒன்றும் சேர்த்து வராத பையன்கள் ஆறு மாதத்தில் சராசரி ஒரு இராத்தலே நிறையில் கூடினர். காணம் சேர்த்து வந்த பையன்கள் சராசரி இரண்டரை இராத்தல் நிறையில் கூடினர். மோர் சேர்த்து வந்த பையன்களில் ஒருவன் $5\frac{2}{3}$ இராத்தல் கூடியுமிருந்தான். காணம் என்றால் ஒரு பையனுக்கு மாதம் ஒரு அணா செலவாகிறது; மோர் என்றால் நித்தம் இரண்டுபையும், வெண்ணெயெடுத்த பாலென்றால் $3\frac{1}{2}$ பையும், பாலென்றால் $7\frac{1}{2}$ பையும் செலவாகும். பால் சத்துள்ள தென்பதும் அதைச் சேர்ப்பதே விசேடமென்பதும் எல்லாரும் ஒப்புவர். தம் தம் கையிலிருந்து செலவழிக்கிற போதுதான், யோசனை வந்துவிடுகிறது.

காணத்தை நன்றாகப் புடைத்து நாவி கல் தூசி போக்கி, இரண்டு மூன்று தடவை கழுவி தண்ணீரில் 24--மணி நேரம் ஊறப்போட வேண்டும். பின் அதை யெடுத்துத் திரும்பவும் நல்ல தண்ணீரில் கழுவி ஒரு விரிந்த மண்சட்டியிலேனும் மூங்கிற் கூடையிலேனும் போட்டு துணி கொண்டு 24-மணி நேரம் முதல் 48-மணி நேரம் வரை காலத்திற் கேற்றவாறு மூடி வைக்கவேண்டும். முளை கிளம்பியதும் எடுத்துத் திரும்பவும் தண்ணீரில் அலசி, அதனோடு உப்புசீரா புதினாக்கீரை (Mint) அல்லது பாற் சுதையம் (Calcium Lactate) இவற்றில் எதானும் ஒன்றைச் சேர்த்துச் சாப்பிடவேண்டும். முளை அதிகமாக வளர்ந்து பச்சை நிறமாக மாறவும் கசக்கவும் செய்யும். ஆகையால், முளை கிளம்பிய வுடனேயே உபயோகப் படுத்திவிட வேண்டும்.

. பையன்களைக் கை கழுவி வரச் சொல்லி வரிசையாக நிறுத்தி ஆளுக்கு இரண்டுதோலா நிறை கொடுத்துமெதுவாகச் சாப்பிடச்சொல்ல வேண்டும். சாப்பிட்டு முடிந்தபின் அவர்கள் தண்ணீர் குடிக்கலாம். (தேங்காய்ப் பூவும் கலந்து கொடுத்தால் பின்னும் அதிகச் சத்துள்ளதாகவும் அதிக உருசியாகவுமிருக்கக் கூடும். ப—ர்)

(The Moga Journal for Teachers D. Riley.

பயிரிடுபவரின் வறுமை

CHOWDHRY MUKHTAR SINGH

(சாரம் VIII)

கிராம அமைப்பு

முன்னோர் பெருமை

நம் முன்னோர்கள் தங்களுரிமைகளைப் பெரிதாகப் பாராட்டியதில்லை. தங்கள் கடமைகளே முக்கியமென உணர்ந்து அவற்றை அணுவளவும் தவறாது நிறைவேற்றி வந்தனர். நாம், இப்பொழுது, பொதுக்காரியங்களை நம் சொந்த சௌகரியத்திற்கும், இலாபத்திற்குமாக்கி நம் பொது வாழ்க்கையையும், கிராமங்களையும் பாழாக்கி வருகிற மாதிரியையும், அவர்களறிந்ததில்லை. நாம், நம் முன்னோர் போன வழியே நடந்துவந்தால், இப்பொழுது நம்மை நம்முடைய சங்கடங்களில் பாதிக்கு மேல் துன்புறுத்தா.

கிராம நிருவாகம்

நம் முன்னோர்கள் காலத்தில் விவகாரங்களை வளர்க்க வக்கீல்களிருந்ததில்லை. விவகாரச் செலவுகளென்பதுவுங் கிடையாது. எவ்விதமான சண்டை சச்சரவுகளும் அந்தந்த கிராமங்களிலேயே தீர்ந்து வந்தன. பலரும் ஏக மனதாக யோக்கியப் பொறுப்பில் சிறந்தவரொருவரைக் கிராம முனிசீபாக நியமித்துவந்ததன்றி, அவருடைய ஆட்செருக்குக்காகவேனும், செல்வாக்கிற்காகவேனும், பெரும்பாலார் வாக்காலேனும் அவரை நியமித்ததில்லை. அவர் தன் பதவிக்காக எந்த அதிகாரியின் தயவையும், சிபார்சையும் எதிர்பார்த்திருந்ததுமில்லை.

சிறு விவகாரங்களை அவராகவே தீர்த்தாலும், சிக்கலான விவகாரங்களைப் பஞ்சாயத்தின் மூலமாகவே தீர்த்து வைப்பார். பிரிட்டிசாட்சியாரம்பத்திலும், விவகாரங்கள், கிராமப் பஞ்சாயத்துக்களுக்கே அனுப்பப்பட்டு வந்தன. பழைய காலத்துத் தலையாரியும் கிராமமுனிசீபு சொன்னபடியே கேட்டு நடந்து வருவான்; கிராமத்தில் திருடு போகாமல் பாதுகாப்பதும், திருடு போன பொருளை ஒப்புவிப்பதும் அவன் கடமைகளாக இருந்தன. அவன் தன் கிராமத்திலிருந்து அடுத்த கிராமம் வரை அயலூர்ப் பிரயாணிகளுக்குத் துணையாகவும் போய் வருவான். இப்படியாக, அவனுடைய கடமைகளைச் சரிவரச் செய்துவருவதற்காக அவனுக்கு இறையிலி நிலங்களும் விடப்பட்டிருந்தன. அவனுக்குப் பொதுப் பணத்திலிருந்து சொற்ப தொகையும், அறுப்படிப்புக் காலத்தில் விளைபொருளில் ஒரு பாகமும் கொடுத்து வரப்பட்டன. அதே மாதிரியாக, கணக்கு வேலை பார்த்து வந்தவர்களுக்கும் இறையிலி நிலங்கள் விடப்பட்டிருந்தன. அவர்களுக்கும், அறுப்படிப்புக் காலத்தில் விளைபொருளில் ஒரு பாகம் கொடுப்பதுண்டு.

கிராமப் பொதுச் சொத்துக்கள்

இப்பொழுது கிராமங்களில் காணும் குளங்களிலனேகம், கிராமத்தாராலேயே வெட்டி பாதுகாக்கப்பட்டு வந்தனவாகும். பழைய காலத்தில் குளங்கள் வெட்டுவது ஒரு சிறந்த தருமமாகவும் கருதப்பட்டு வந்தது. பணக்காரர்களும் அப்படிப் பல குளங்கள் வெட்டியிருக்கின்றனர். கிராமந்தோறும் கோவில்களும், பள்ளிகளும் பள்ளிக்கூடங்களும் பொதுச் சாவடிகளுமிருந்து வந்தன.

முற்காலப் பெருமை

பழைய காலத்தில் இவையெல்லாம் எப்படிச் சாத்தியமாயின, என்று கேட்கலாம். பழைய காலத்தில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கடமைகளையே முக்கியமாகக் கருதி வந்தனர்; பொதுவாக, பிறருக்கும் உபகாரமாக வாழ்ந்து

வந்தனர். அவர்களுடைய உபகார சிந்தனையே, இவற்றை யெல்லாம் சாத்தியமாக்கிற்று. இன்னுமொன்று, கிராமங்களில் பிரமாணம் செய்து வைப்பாருமில்லை; கச்சேரிகளில் பிரமாணம் வாங்காமல் வாக்குமூலம் கேட்பது மில்லை. என்றாலும், இப்பொழுதும் கச்சேரிகளில் பொய் சொல்லக் கூசாதவர்களும், கிராமப் பஞ்சாயத்துக்கு முன் உண்மையைப் பேசக் காணலாம். கிராமங்களில் உண்மையை யொழித்து வாழ முடியாது; ஆகையினால், பழைய காலத்தில் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு நியாயத்தைக் கண்டுபிடிப்பதிலும் சிரமமேற்பட்டதில்லை.

(தொடரும்)

9. கதை : சரித்திரம்:

காலம் சென்ற குரு சதேதத்தரும் விரதச்சாரி இயக்கமும்.

II

தற்காலப் போக்கு

நாம் இயற்கையோடு இணங்கி வாழ்கிறதில்லை; செயற்கையையே பெரிதும் விரும்புகிறோம். அறிவைப் பெருக்குவதில்லை; தூராசையிலேயே மூழ்கிறோம். உண்மையை வளர்ப்பதில்லை; சமர்த்தையே போற்றுகிறோம். புதுமைப் பித்துக் கடிமையாகி பழமையை மறக்கிறோம். உழைப்பைப் பழித்து, நம் உடல் வளையாமல், பிறர் உழைப்பால் வாழ விரும்புகிறோம். நம் எளிமையைப் போக்கிக் கொள்ள முயற்சிக்காது பிறர் பணத்தைப் பொதுவுடைமையாக்க விழைகிறோம். இப்படியாக, நாம் மகிழ்ந்து வாழ்வதற் கிடமில்லாது, அனேகமாக நம் பொழுதை துன்பத்திலும், துயரத்திலுமே கழிக்கிறோம். நம் நாட்டுப் பற்று நம் நாட்டாருக் குதவுகிறதில்லை; பிற நாட்டாரை வெறுக்காமலிருக்க விடுகிறது மில்லை. இத்தகைய போக்கினால் நம் நாடெங்கும், ஏன் உலகமெங்குமே ஒற்றுமை குறைந்து வேற்றுமையும், போட்டியும் வளர்ந்து மோசங்களே பல்கி வருகின்றன.

விரதச்சாரி இயக்கத் தத்துவம்

நாமெல்லாம் நற்குணம் நிறைந்தவர்களாகவும், திறமை வாய்ந்தவர்களாகவும், நம்முடைய வேலையை உற்சாகத்துடன் செய்பவர்களாகவும், சமூக ஊழியத்தில் ஆர்வமுடையவர்களாகவும் திகழவேண்டும். சங்கீதமும், நடனமும் நம்முள்ளத்தையும், உடம்பையும் ஒரு முகப்படுத்தி நம் குணத்தைப் பண்படுத்தவும் நம் வேலையை உற்சாகமாகச் செய்து முடிக்கவும் உதவுவனவாகும். வெய்யிலிலும், காற்றிலும் கடுமையான வேலை செய்கிறவர்களும், ஆடிப்பாடித் தங்கள் வேலைகளைச் சிரமமில்லாமல் செய்து முடிப்பதையும் நாம் காண்கிறோம். வேலைக் களைப்பை ஆடியும், பாடியும் போக்கிக் கொள்வதையும் பார்க்கிறோம். இப்படியாக, நாம் செய்யும் எதொரு காரியத்தையும் உண்மையாகவும், திறமையாகவும் மகிழ்ச்சியுடனும்உற்சாகத்துடனும்செய்து வரவேண்டும். நம் நாட்டின் சாதி சமயம் பால் வேற்றுமைகளும் ஒழியவேண்டும். இத்தகைய நோக்கங்களெல்லாம் நிறைவேறக் கூடிய வகையிலேயே, இந்த இயக்கம் அமைந்து வேலை செய்து வருகிறது. இதில் சிறுவர் சிறுமியரும், முதியோரும் கலந்து கொள்ளலாம். இயக்க விதிகளில் பெண் பாலார்க்கேற்ற மாறுதல்களு மமைந்திருக்கின்றன. அந்தந்தப் பிரதேசத்திற் கேற்பவும் முக்கிய அம்சங்களை விடாது சில விரதங்களைக் கூட்டிக்கொள்ளவும் செய்யலாம். ஆனால், அடிப்படையான குறிக்கோள்களைந் தையும் அதாவது, அறிவு, உழைப்பு, உண்மை ஒற்றுமை மகிழ்ச்சி இவற்றைக் கொஞ்சமும் நழுவ விடக்கூடாது. இந்த இயக்கத்தின்

சின்னம் மண்வெட்டியாகும். இந்த இயக்கத்தின் முக்கிய ஆக்க வேலைகளும் மண்வெட்டி முதலியன கொண்டு செய்யும் வேலைகளேயாகும். இந்த இயக்கத்தின் தொண்டர்களைக் கொண்டு, முதியோர் கல்வியையும் பரப்பலாம். இந்த இயக்கம், அந்தந்தப் பிரதேசத் தாய் மொழியைக்கொண்டே வேலை செய்வதாக இருப்பதால், நாட்டுப்பற்றுடன் தாய்மொழிப் பற்றும் வளர்ந்துவர இடமுண்டு. இந்த இயக்கம் அந்தந்தப் பிரதேசக் கலைகள், கைத்தொழில்கள், ஆட்டங்கள், கூத்துக்கள், பாட்டுக்களைக்கொண்டே வேலை செய்வதாயுமிருப்பதால் பழமையில் ஓரார்வமும் வளர்ந்துவரும். சாதி சமய பேதங்களின்றிச் சேர்ந்து வேலை செய்வதால், வகுப்பு வாதங்களும் ஒழியும். இந்த இயக்க முயற்சிகளெல்லாம் செலவே இல்லாதனவாகவும் குறைந்த செலவையாவனவாகவும் இருப்பதால், எவருக்கும் இதில் சேர்ந்து வேலை செய்யச் சௌகரியமுண்டு.

தத்துவ விளக்கம்

ஒவ்வொரு விரதச்சாரியும் முறையே ஒழுக்கத்தையும், கடமையையும் சங்கம் அதாவது ஒற்றுமையையும், நடனம் அதாவது மகிழ்ச்சியையும் வளர்த்து வரவேண்டும்; திடமான உடலையும் கூர்மையான புத்தியையும் பெறுதலும், கடமையைச் சரிவரச் செய்தலும் மற்றும் குறிக்கோள்களைத் திட்டமாக நிறைவேற்றி வைத்தலும் வேண்டும். எதொரு பொதுக் காரியத்தையும் கொடிக்கு வணக்கம் செய்தும் தேசிய கீதம் பாடியுமே ஆரம்பிக்க வேண்டும். சிறுவரும் சிறுமியரும் ஆண்களும் பெண்களும் இந்த இயக்கத்தின் விரதங்களை அனுட்டித்து வருவதான உறுதியும் தர வேண்டும்; அவற்றை அனுட்டித்தும் வர வேண்டும்.

சில விரதங்கள்

களைகளும் முள் மொடல்களும் அடர்ந்து வளராதபடி ஒழித்து வரவேண்டும். காய்களும். பழவர்க்கங்களும் பயிரிட்டு வரவேண்டும். ஆடு மாடுகளை நன்குகக் கவனித்து வரவேண்டும். நல்ல வெளிச்சமும் காற்றோட்டமும் வேண்டும். தண்ணீரின் சுத்தத்தைக் காத்து வரவேண்டும். பெண்களின் விடுதலைக்காகப் பாடுபட வேண்டும். கலியாணம் செய்வதற்கு முன்னதாகவே சம்பாத்தியமிருக்க வேண்டும். காலக்கிரமத்தை யனுசரிக்கவேண்டும். சுத்தத்தைப் பேண வேண்டும். பசித்தாலொழிய, உண்ணக்கூடாது. மிருகங்களிடத்திலும் பட்சமுடனிருக்கவேண்டும். ஏதேனும் தொழில் செய்துவரவேண்டும். கோபம் வந்தாலும் அதனை அடக்கிக் கொள்ள வேண்டும். இப்படியாக கெட்ட பழக்கங்களை விட்டும் விரதங்களை அனுசரித்தும் வர வர, நமக்கு மகிழ்ச்சி ததும்பி வழிந்து கொண்டிருக்கும். கட்டுப்பாடுடன் கூடிய வாழ்க்கையும் (Pleasant and disciplined life) எளிதில் அமையும்.

---

10. கைத்தொழில்: குடிசைத்தொழில்

பொருளாதார விருத்திக்கான சௌகரியங்களைப் பற்றிய குறிப்பு

L. B. Green, Director of Industries and Commerce, Madras.

(சாரம் VI)

பித்தளை, செம்பு, வெண்கலம் மற்றும் உலோகங்கள் இவற்றில் செய்யும் வேலைகளும், கயிறு திரித்தலும், பின்னலும், கூடை முடைதலும், பிரம்பு வேலையும், கற்பலகைகள், விளையாட்டுச் சாமான்கள், சுருட்டு பீடி முதலியன செய்தலும் நம் மாகாணத்தில் நடந்துவரும் மற்றும் கைத்தொழில்களாகும்.

எண்ணெய் ஆட்டுதலும் கிராமந்தோறும் நடைபெற்று வருகிறது. 38-39ல் எண்ணெ

யெடுப்பதைப் படித்துவர வார்தாவுக்கு எட்டு மாணவர்கள் அனுப்பப்பட்டனர். அவர்கள் திரும்பி வந்து கைத்தொழிற் பள்ளிகளில் ஆசிரியர்களாகவும் அமரலாம். சொந்த ஊர்களில் அந்தத் தொழிலை விருத்தியாகவும் செய்து வரலாம். அப்படிச் செய்வார்களென்ருல், அவர்களுக்கு அரசாங்கமும் கைத்தொழில் உதவிச் சட்டத்தின்படி வேண்டிய உதவி செய்யக்கூடும். கேரள சவர்க்காரத் தொழிற்சாலையில் சவர்க்காரம் செய்து வரும் முறையும் எண்ணெய்களைச் சுத்தி செய்யும் முறையும் சாதாரணமாக குடிசைகளிலும் செய்யக் கூடியன. அவற்றிற்கு வேண்டிய பொருள்களும் நம் மாகாணத்தில் ஏராளமாகக் கிடைக்கின்றன. வேண்டிய உபகரணங்களையும் சொற்பச் செலவில் சேகரித்துக் கொள்ளலாம். நம் நாட்டுச் சவர்க்காரத் தேவையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கிராமங்களில் கிடைக்கும் எண்ணெய்களையும் சாதாரணமாக உபயோகிக்கச் சௌக்கியமானதும் என்ருலும், நல்லதரமான சலவைச் சவர்க்காரங்கள் செய்து குறைந்த விலைக்கும் விற்று வரலாம்.

திருநெல்வேலி ஜில்லா இரட்டைக் குளத்தில் பதனீரிலிருந்து வெள்ளைச் சருக்கரை செய்தும் காட்டப்பட்டிருக்கிறது. அப்படி வெள்ளைச் சருக்கரையாகச் செய்து விற்பதே கருப்புக்கட்டியாக விற்பதைக் காட்டிலும் நல்ல இலாபம் தரக்கூடும். பனையும் பேரீச்சுமுள்ள பிரதேசங்களிலெல்லாம் வெள்ளைச் சருக்கரையும் செய்து வரலாம். சேலம் ஜில்லாவில் கள் விற்பனை செய்து வந்தவர்களுடைய பொருளாதார நிலைமையைச் சௌகரியப் படுத்துவதற்காகத் தென்னைப் பனையிலிருந்தெடுக்கும் பதனீரிலிருந்து வெள்ளைச் சருக்கரை செய்து காட்டப்பட்டது. நம் மாகாணத்திற்கு வேண்டிய சருக்கரையில் மூன்றிலொரு பங்குதான் நம் மாகாணத்தி லுண்டாகிறது. ஆகையினுல், தென்னை பனை பதனீரிலிருந்து சருக்கரை செய்வதற்கு எவ்வளவோ இடமிருக்கிறது.

நெல்லை, ஆலையில் அரைப்பதால் அரிசியிலுள்ள பி உயிர்ச்சத்து அனேகமாகக் குறைந்து போகிறது. ஆதலால், நம்முடைய் சுகத்திற்காகவும் கையினுல் திரித்தல் அல்லது குத்தலையே ஆதரிக்க வேண்டியவர்களாக இருக்கிறேம். அதனுல், பலருக்கு வேலையும் கிடைக்கக்கூடும்.

கர்நூல் ஜில்லா மரக்காப்பூரில் முதலில் 1921-ம் வருடம் கற்பலகைகள் செய்யப்பட்டன. அவை வெகு மலிவாக இருப்பதால், அந்தக் கற்பலகைகளுக்குத் தேவை நாளுக்கு நாள் அதிகப்பட்டுக்கொண்டே வருகிறது; தகட்டுக் கற்களைப் பிளத்தலும், அவற்றிற்கு மெருகிடுதலும், சட்டம் பிடித்தலும் குடிசைத் தொழில்களாகவே செய்யப்பட்டு வருகின்றன. மலையாளம் ஜில்லா கல்லையில் ஒரு கற்பலகைத் தொழிற்சாலையும் ஏற்பட்டிருக்கிறது. மரக்காப்பூரிலிருந்து வரும் தகட்டுக் கற்களை வைத்தே அங்கே வேலை செய்யப்படுகிறது. அந்தத் தொழிற்சாலை சொந்தக்காரர் கற்பலகைத் தகட்டுக் கற்களுக்காக மரக்காப்பூரில் ஒரு இடத்தைக் குத்தகைக்கும் வாங்கியிருக்கிருர். மரக்காப்பூரில் சட்டம் போடுவதற்கு மரம் கல்லையிலிருந்துதான் போகிறது. இப்பொழுது சட்டத்திற்கு வேண்டிய மரம் ஐதராபாத்திலிருந்தும் வந்துகொண்டிருப்பதை நிறுத்தி நம் மாகாணத்திலேயே வேண்டியன செய்து கொள்ள முடியுமா வென்பதைப்பற்றியும் கவனித்து வரப்படுகிறது.

கர்நூல், பெல்லாரி, அனந்தப்பூர் ஜில்லாக்களில் கண்ணுடி வளையல்கள் இப்பொழுதும் செய்து வரப்படுகின்றன. சென்னைத் தொழிற்சாலையிலிருந்து பல வர்ணக் கண்ணுடிக் கட்டைகள் கிடைக்கக்கூடுமென்ருல், அங்கங்கே சிறு உலைகளை வைத்தும் கண்ணுடி வளையல்கள் செய்து வரலாம்.

நாம், பழைய தொழில்களையே நம்பியிருத்தலும் கூடாது. நாம் காலத்திற்கேற்ப புதிய தொழில்களையும் கையாளவேண்டும். காய்களை பழங்களை பக்குவம் செய்து விற்பதும் ஒரு நல்ல தொழிலாகும். குடிசைத் தொழிலாகவும் அதனைச் செய்யலாம்; தொழிற்சாலையில்

வைத்தும் செய்யலாம். நீராவியமுத்தத்தினுல் பக்குவப்படுத்தும் அடுப்புகள் வேண்டும். அவற்றைச் சாதாரண போகணிகளில் (Tins) அடைத்து சிறு கையடைப் பெந்திரங்களால் மூடிடவும் செய்யலாம். இதற்காக, சிறு சங்கங் கள் இருக்கும் ஜில்லாக்களில் பழங்களைக் காய் களைப் பக்குவப்படுத்துவதில் திறமை பெற்ற வர்களுடைய நிருவாகத்தில் மத்திய சங்கங் களுமிருக்கவேண்டும். இரட்டை விளிம்புகள் வைத்து மடக்கி புதுமாதிரியாகப் போகணிகள் செய்வதற்கான எந்திரங்களைக்கொண்டு மத் திய சங்கம் போகணிகள் செய்தும் வர வேண்டும்.

வீடுகளில் உபயோகிப்பதற்காக அதிகச் செலவில்லாமலும், சிரமமில்லாமலும் வர்ணப் பூச்சுத் திராவகங்களும் செய்துவரலாம்.

காகிதங்கள் செய்துவருவதற்கான புற்கள் நம் மாகாணத்தில் நிரம்ப இருப்பதால், கையால் காகிதம் செய்யும் தொழிலும் நம் மாகாணத் தில் நடந்துவரலாம். வார்தாவில் போய்க் காகி தம் செய்யப் படித்து வருவதற்காக அனுப்பப் பட்ட பத்துப் பையன்களும் 1938-ம் வருடம் டிசம்பரிலேயே திரும்பி வந்துவிட்டனர். காகி தம் செய்யச் சென்னையின் சமீபமாகக் கோடம் பாக்கம் அரிசன் கைத்தொழிற் பள்ளியிலும் பெல்லாரி ஜில்லா பெத்தகடுப்பூர் பக்கத்தில் பரத்துவாச ஆசிரமத்திலும் பயிற்சி தரப்படு கிறது. மலையாளத்தில் ஓரிடத்திலும் இராச மகேந்திரபுரத்திலும் வேறிரண்டு பள்ளிகளில் வார்தாவில் பயிற்சி பெற்றவர்களால் கையால் காகிதம் செய்யக் கற்பிக்கப்பட்டுவருகிறது.

மலையாளத்தில் கயிற்றினுல் பாய்கள் நெய் தலும், மற்றும் கயிற்றுத் தொழில்களும் விருத்தி செய்து வருவதற்குச் சௌகரியமாக அவை செய்து காட்டப்படுகின்றன. நம் மாகா ணத்தில் மற்ற இடங்களிலும் விருத்தி செய் வதற்காகக் கவனம் செலுத்தி வரப்படுகிறது.

நம் மாகாணத்தில் தேனீ வளர்த்தலும், கோழி வளர்த்தலும் நல்லஇலாபம் தரக்கூடியன வாக இருக்கின்றன. விவசாயக் கருவிகளும், தோற் சாமான்களும், மாக்கல் மரவைகளும் வாண வேடிக்கைப் பண்டங்களும், பட்டாசுக ளும், வாசனைத் தைலங்களும், விளையாட்டுச் சாமான்களும், இரப்பர் பொம்மைகளும், கூடா ரங்கள் முதலியனவும், மரத்திலும் கொம்பி லும் சீப்புகளும், பொத்தான்களும், மண்பாண் டங்களும், தட்டு முட்டுகளுக்கு வேண்டிய கைப்பிடிகள், பூட்டுகள் முதலியனவும், குடைக்கு வேண்டியனவும் தகடுகளும், கம்பிகளும், கொண் டையாணிகளும், குண்டூசிகளும், பேனுக்களும், துடைப்பங்கள் முதலியனவும் நம் மாகாணத் தில் இன்னும் விருத்தியாகச் செய்து வரலாம்.

(தொடரும்)

---

11. செய்தித் திரட்டு:

அ. விவசாய வியாபாரக் கைத்தொழிற் செய்திகள்

1. நம் மாகாணத்தில், மோட்டார் களுக்குப் பெட்ரோலுக்குப் பதிலாகச் சுமார் 30,000 தன் (ton) கரி தேவையாயிருக்கிறது. இதற்கு சர்க்கார் காடுகளிலிருந்து சுமார் 12,000 தன் கரி சப்ளை செய்ய வசதி ஏற்பட் டிருக்கிறது. பாக்கி 18,000 தன் கரி உண் டாக்க சவுக்குத் தோப்பு அதிகமாயுள்ள இடங் களில், முதிர்ந்த சவுக்கு மரங்களிலிருந்து கரி உண்டு பண்ண விரும்புகிறார்கள். இதற்காக, சென்னை அரசாங்கம் கூட்டுறவுப் பதிவாளரைச் சவுக்குத் தோப்புகள் உண்டுபண்ணி விருத்தி செய்யவும், சவுக்கு மரத்திலிருந்து கரி செய்ய வும், கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தும்படிக் கேட்டிருக்கிறது. சவுக்கு மரத்தைக் கட்டை யாக விற்பதைவிடக் கரி செய்து விற்பதால், ஒரு தன்னுக்கு ரூ. 1–14–0 அதிக இலாபம் கிடைக்கிறது.

கூட்டுறவு.

2. பர்மாப் பொன்னேர் விழா: நூறுண்டுகளுக்கு முன் வரை, பர்மாச் சக்கரவர்த்திகள் தங்கள் நாடெங்கும் உழவு ஆரம்பிக்கு முன் பொன்னேரில் (Golden Plough) அலங்காரம் பண்ணிய எருதுகளைப் பூட்டி முழங்கால் தண்ணீரிலும் வயலுக்குள் இறங்கி தொளியுழவு உழுது தாங்களும் உழவர்களே யெனப் பெருமை பாராட்டி வந்தனர். அத்தகைய சடங்கு இவ்வாண்டில் பர்மா முதல் மந்திரியால் சென்ற ஜூலை மாதத்தில் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

Modern Review.

(நம் மாகாணத்திலும், முதல் விவசாய மந்திரியாக வந்த சர். கூர்மவேங்கட ரெட்டி நாயுடு இற்றைக்கு இருபது வருடங்களுக்கு முன் தாமும் உழவர் வகுப்பைச்சேர்ந்தவரே யெனப் (கவரையர்) பெருமையுடன் கூலியாட்களோடு சேர்ந்து கோயம்புத்தூரில் சோளக் கதிர்கள் பன்னரிவாள் கொண்டு அறுத்துத் தள்ளியது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். ப-ர்.)

3. பம்பாய் மாகாணத்தில் நிலக்கடலை விதைப்பு சென்றுண்டைக் காட்டிலும் 16·4 சதம் குறைவு. வெளி நாடுகளில் போய் விற்பதற் கில்லையாதலால், விலை விழுந்திருப்பதொரு காரணம்; மழை பிந்திப்போனதுமல்லாமல் போதியதாகவுமிருக்கவில்லை.

Bombay Information.

4. பம்பாய் தென்பாகத்தில் இப்பொழுது விவசாயிகளுக்காக நடந்துவரும் நெசவு வகுப்பு முடிந்ததும், நெசவாளிகளுக்காக நெசவு வகுப்பு துவக்கி 1943-ம் வருடம் மார்ச்சு மாதம் 31-ம் தேதி முடிய நடத்தப்படும். அதில் படித்துவரும் மாணவர்களுக்கு அவர்கள் பள்ளிக்கூடத்திற்கு வரும் ஒவ்வொரு நாளுக்கும் மும்மூன்றணு வீதம் உதவியளிக்கப்படும்.

Bombay Information.

5. ஒரு ரூபா செலுத்தும் எளிய உழவர்களுக்குப் பத்து உழவு மரக்கருவிகள் தொகுப்பாகத் தரப்படுகின்றன. அவர்கள் தங்கள் வீட்டுச் செலவுக்காக இனுமாகவும் ஒரு தலைச் சுமை விறகு அல்லது புதர் (Brush-wood) கள் வேண்டும்போதெல்லாம் காட்டில் எடுத்துக் கொள்ளவுஞ் செய்யலாம்.

Hyderabad Information.

6. 50 ரூபாவுக்கும் அதற்குக் குறைந்தும் நிலவரி செலுத்துகிறவர்கள் தங்களுடைய நிலங்கள் பூராவையுமேனும் அல்லது அவற்றின் பாகத்தையேனும் விற்கக்கூடாதென்று நைசாம் அரசாங்கம் திட்டம் செய்திருக்கிறது.

Hyderabad Information.

7. மழைக் குறைவால், ஜீவனமில்லாச் சங்கடம் அதிகமாகி வருகிறது. அக்குறையை நீக்குவதற்காகச் சமுசாரிகளுக்கு (நைசாம்) அரசாங்கம் மூன்று இலட்ச ரூபா கடனாகக் கொடுக்க முன்வந்திருக்கிறது.

H. E. H. Nizam's Dominions, P.E. No.68.

ஆ. கிராமப் புனருத்தாரண நலதாபனச் செய்திகள்

1. நம் மாகாண அரசாங்கம் நம் நாட்டின் அபிவிருத்திக்கான குடிசைத்தொழிலில் ஈடுபட்டு வேலை செய்து வருகிறவர்களுக்கு ரூபா 500-க்கு மேற்போகாதபடி கடனாகவோ இனுமாகவோ உதவ முன் வந்திருக்கிறது. அவ்விதம் உதவியை விரும்புகிறவர்கள் அந்தந்த ஜில்லாக் கலக்டருக்கு மனுச் செய்து கொள்ளவேண்டும்.

The Madras Journal of Co-operation.

2. (1) திருநெல்வேலி ஜில்லாவில் 24 கிராமங்களில் கக்கூசுகள், குப்பைக் கிடங்குகள்

விளையாட்டிடங்கள் இவற்றிற்காக இடங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

(2) சேலம் ஜில்லாவில் இராசிப்பூரில் 50 மாணவர்களுக்குக் கிராமமுன்னேற்ற வேலைகளிலும் முதலுதவியிலும் பயிற்சி கொடுக்கப்பட்டது. பந்தய விளையாட்டுகள் நடக்கும் கிராமங்களுக்கெல்லாம் சேலம் நாட்டாண்மைக் கழக பிரசார வண்டியும் போய்க்கொண்டிருந்தது. சுகாதாரம், குடியொழிப்பு, கிராம முன்னேற்றம் பற்றிப் பல பிரசங்கங்களும் செய்யப்பட்டன; சினிமாப் படங்களும் காட்டப்பட்டன.

Press Communique No. 51.

இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள்

1. கிராமப்புனருத்தாரணத்திற்காக நம்மிந்திய அரசாங்கம் கொடுத்து வரும் உதவித் தொகையிலிருந்து நம் மாகாண அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கிடங்குகள் (Godowns) கட்டுவதற்காகக் கால் வாசிச் செலவு இனமாகக் கொடுத்து வந்தது. எளிய சங்கங்களுக்கு இது போதியதாக இல்லையென்று இப்பொழுது தெரிந்து மேல் அரை வாசிவரை இனமாகக் கொடுப்பதாக உத்தரவு செய்திருக்கிறது.

The Madras Journal of Co-operation.

2. கோயம்புத்தூருக்குப் பக்கத்திலுள்ள போத்தனூர் இருப்புப்பாதைச் சந்தியில் ஒரு சருக்கரைக் கம்பெனியை சுமார் ஐம்பதாண்டுகளுக்கு முன்பு அமைத்து நடத்திய பெரியோர்களின் முன் யோசனை அரிதிலும் அரிது. சுதேசி இயக்கம் ஆரம்பமாகாத அக்காலத்திலேயே திரு. சதாசிவ முதலியார் முதலியோரின் பெருமுயற்சியும் பாராட்டத் தக்கதாகும். கரும்புத் தோட்டம், சருக்கரைச்சாலை, புதிய முறை எந்திரங்கள் முதலியவை உள்பட ரூ. 1,35,000-க்குக் கூட்டுறவுச் சங்கத்தார் விலை பேசி வாங்கிவிட்டார்கள். 10—9—41 தேதி புதன்கிழமை அதிகாலையில் அச்சங்கத்தின் ஆதரவில் நல்ல முகூர்த்தத்தில் கரும்புகளை ஆலையில் போட்டுச் சருக்கரை எடுத்த காட்சி குறிப்பிடத்தக்கது. விவசாயிகளும் அவர்களுடைய நலத்தைக் கோருகிற எல்லாரும் இந்தப் பெருமுயற்சியானது முழு வெற்றியடையும் வகையில் தாராளமாக ஆதரித்து வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

கூட்டுறவு.

3. ஐக்கிய மாகாண நல்வாழ்க்கைச் சங்கங்கள்: வறுமையினால் பீடிக்கப்பட்டிருக்கும் சாதாரண சனங்களுக்குத் தங்களுடைய நிலைமையைத் திருத்திக்கொள்ளக்கூடும்; திருத்திக்கொள்ள வேண்டுமென்று கூடத் தோன்ற முடியாத விதமாக அவர்களுடைய வறுமை அவர்களைப் பாழாக்கி வருகிறது. ஆகையால், அவர்களுடைய வாழ்க்கையைத் திருத்துவதற்கு முன் திருத்தவேண்டுமென்ற ஆசையை அவர்களுக்குண்டாக்குவதே நம்முடைய முக்கிய வேலையாக வேண்டும். நாம் வாழலாம் நன்றாகவும் வாழலாம், நமக்கு உழைப்பும் உற்சாகமும் தான் வேண்டுமென்று அவர்களை உணரச் செய்ய வேண்டும். இது நல்வாழ்க்கைச் சங்கங்களின் மூலமாகத்தான் செய்யமுடியும். அந்தச் சங்க விதிகளின்படி அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளுமுண்டு; தவிர்க்கவேண்டியனவுமுண்டு. தீமையான பழக்க வழக்கங்களை அவர்கள் விட்டுவிடவேண்டும்; நன்மை தீமைச் சடங்குகளில் அதிகமாகச் செலவழிப்பதை நிறுத்திவிடவேண்டும்; சுகாதாரமான சௌகரியமான வாழ்க்கையே வாழவேண்டும்; விளைவைப் பெருக்கவேண்டும்; உபதொழில்களிலும், விநோதப்போக்கான வேலைகளிலும் அவர்களீடுபடவேண்டும்.

ஐக்கிய மாகாணத்தில் மொத்தம் 16,778 சங்கங்களிருப்பதில் 5,222 அதாவது கிட்டத்தட்ட மூன்றிலொரு பங்கு சங்கங்கள், நல்வாழ்க்கைச் சங்கங்களாக இருக்கின்றன. அவற்றில் ஆயிரத்துக்கு மேலும் நல்ல வேலை செய்து வருகின்றன.

The Madras Journal of Co-operation.

(நம் மாகாணத்திற்கு இப்படிச் சங்கங்கள் வேண்டாமென்று சென்னைக் கூட்டுறவு விசாரணைக் கழகம் சிபார்சு செய்திருக்கிறதென்றால், அதன் சிபார்சுகளைப் பற்றி நாம் அதிகமாகவும் சொல்லவேண்டியதில்லை. ப—ர்.)

4. திரிசிராப்பள்ளி சில்லா நங்கவரம் கூட்டுறவுச் சங்கமும், மேலப்பாளையம் கூட்டுறவுச் சங்கமும் நிலங்களை ஒன்று சேர்க்க 23 மனுக்கள் பெற்றன. நான்கு மனுக்களை முடித்திருக்கின்றன.

Press Communique No. 51.

5. தபசில் வகுப்பினரில் கிறித்தவர்களானவர்களுக்கு பள்ளிச் சம்பளச் சலுகை அடியிற்கண்ட நிபந்தனைகளின் பேரில் காட்டப்பட்டுவந்தன.

1. தாயின் வழியிலும் தகப்பன் வழியிலும் பெற்றவர்களும் பெற்றோர்களின் பெற்றவர்களும் அல்லது தாங்களேனும் தபசில் வகுப்பினராக இருந்திருக்கவேண்டும்.

2. அவர்களுடைய குடும்பம் தபசில் வகுப்பினர் நிலைமையிலேயே யிருந்து வரவேண்டும்.

இந்த நிபந்தனைகள் சிரமமாக இருக்கின்றனவென்றும் தபசில் வகுப்பினர்களுக்கும் அவர்களில் கிறித்தவராகவேனும் மற்ற மதத்தவராகவேனும் மாறி யிருப்பவர்களுக்கும் சமூக நிலைமையில் வித்தியாசம் ஒன்றுமில்லையென்றும் தெரியவருகிறது. ஆகையால், தபசில் வகுப்பினர்களுக்குரிய எல்லாச் சலுகைகளும் அவர்களுக்கும் நடப்பு வருட முதல் உண்டென்பதாகச் சென்னை அரசாங்கம் அனுமதித்திருக்கிறது.

Press Communique No. 49.

ஈ. கூட்டச் செய்திகள்.

1937-ம் வருடம் மே மாதம் சிம்லாவில் நடைபெற்ற கால்நடை மகா நாட்டில் ஒவ்வொரு மாகாணத்திலும் கால்நடைமுன்னேற்ற வேலைகளைக் கவனிப்பதற்காக ஒரு கழகமும் (Board) மேய்ச்சல் வசதிகளை அதிகரிப்பதற்கு ஓர் உட்கழகமும் (committee) அமைக்கவேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டது. அதற்கு அடுத்த வருடம் விவசாய இலாகாவின் கால்நடைப் பிரிவை, கால்நடை இலாகாவுக்கு மாற்றப்பட்டது. கால்நடை இலாகா டைரக்டர் ஒரு திட்டமும் தயாரித்தார். அதன்படி சென்ற வருடம் பிப்ரவரி மாதத்தில் சென்னை மாகாணக் கால்நடை அபிவிருத்திக் கழகம் துவக்கப்பட்டது. விவசாய இலாகா டைரக்டர், கால்நடை டைரக்டர் கூட்டுறவுப் பதிவாளர் ஆகிய அதிகாரிகளுடன் ஐந்து சனத்தலைவர்களும், இந்தக் கழகத்தின் அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவ்வைவரும் மூன்று வருட காலம் வரை இந்தக் கழகத்தின் அங்கத்தினர்களாக இருப்பார்கள். இந்தக் கழகத்தின் தலைமைத்தானம் சென்னையாகும். சென்ற வருடத்தில் நடைபெற்ற கழகக் கூட்டத்தில் சில முக்கியமானகாரியங்கள் ஆலோசிக்கப்பட்டன. ஒங்கோல், காங்கயம், ஆலம்பாடி ஆகிய குறிப்பிட்ட வட்டாரங்களில் கால்நடைச் சங்கங்களை முதலில் துவக்கவேண்டும். இச்சங்கங்கள் பிரியப்பட்டால் சில காலத்திற்குப் பிறகு இவற்றைக் கூட்டுறவுச் சங்கங்களாகப் பதிவு செய்து கொள்ளலாம். மேற்கண்ட இனங்களிலிருந்து சிறு காளைகளைச் சில

குறிப்பிட்ட குடியானவர்களுக்குக் கொடுத்து அவற்றை அவர்கள் வைத்துக் காப்பாற்றுவதற்கு வேண்டிய பண உதவியும் செய்யவேண்டுமென்று இந்தக் கழகம் சிபார்சு செய்திருக்கிறது. சர்க்கார் கால்நடைப் பண்ணை நடைபெறுகிற ஒசூரில் சிறுகச் சிறுக ஓராயிரம் கால்நடைகளை வளர்க்கவும் உத்தேசித்திருக்கிறது. வருடந்தோறும் கால்நடைக் கண்காட்சிகளை நடத்துவதற்கு அரசாங்கம் பண உதவி செய்ய முன்வந்திருக்கிறது. திருப்பூர் கால்நடைக் கண்காட்சி இடைவிடாமல் ஒவ்வொரு வருடமும் நடைபெறுவது நலமாயிருக்கும் என்று கழகம் சிபார்சு செய்தது. அப்படியே வருடந்தோறும் கால்நடைக் கண் காட்சி நடத்திவைக்கக் கோயம்புத்தூர் ஜில்லா விவசாய சங்கத்தார் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இது போல வட ஆர்க்காடு, திருச்சி, கள்ளிப்பட்டி, மதுரை முதலிய இடங்களில் கால்நடைக் கண்காட்சிகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

புதிய முறையில் கோழி வளர்க்கும் நிலயங்களையும் அமைத்துக் கால்நடை வளர்ப்பு வேலையுடன் இதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கழகம் சிபார்சு செய்திருக்கிறது. சென்னை மாகாணத்தில் சர்க்கார் கால்நடை நிலயங்களில் ஆறு வட்டாரங்கள் அதற்காகப் பொறுக்கி எடுக்கப்பட்டிருக்கின்றன. சென்னை நகரத்திலுள்ள தேனும்பேட்டையில் கோழி வளர்ப்புப் பண்ணையொன்று அமைத்து நடத்துவதற்கு அரசாங்கம் ஆதரவு கொடுத்திருக்கிறது.

காங்கயம், ஒங்கோல், கள்ளிக்கரை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த காளைகளை வாங்கி நல்ல மத்திய தலங்களில் வளர்ப்புக்கு விட வேண்டுமென்றும், இந்த வேலையைத் தீவிரமாகச் செய்ய ஒரு தனிச் சங்கம் காங்கயத்தில் இலாகா தாபிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. சென்னையிலுள்ள கறவை வற்றிப்போன பசுக்கள் கசாப்புக்கடைக்காரனுக்குப் போகாதபடி தடுத்து மறுபடியும் கறவைக்கு வரும்வரை மேய்ச்சலுக்கு ஏற்பாடு செய்யத் திட்டம் ஒன்றும் யோசனையிலிருப்பதாகத் தெரிகிறது.

கூட்டுறவு.

---

12. அறிவுரைத் திரட்டு.

அ. விவசாய வியாபாரக் கைத்தொழிற் குறிப்புக்கள்.

1. விவசாயம் விளைவில் மட்டுமல்ல; விலைவாசியிலும் பெரும் சூதாட்டம். விதைத்தது முதல் விளைவாகிற வரை மழையும் வெய்யிலும் காற்றும் இன்னவிதமாகத்தான் அமையுமென்று சொல்ல முடிகிறதில்லை; பயிர்ச் செலவுதானென்னுகும், மேனிதானென்ன காணும் என்றும் சொல்ல முடிகிறதில்லை. விளைவைத்தான் சொல்ல முடியாது, விலைவாசியையும் சொல்ல முடியாதாவென்றால், அதனைப்பற்றியும் சொல்ல முடிகிறதில்லை. நாம் மழையையும், வெய்யிலையும், காற்றையும் அவற்றின் மூலம் விளைவையும் கட்டுப்படுத்த முடியாதென்றாலும், அரசாங்க உதவியால் விலையைக் கட்டுப்படுத்த முடியும். விளைவைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமையில், கட்டுப்படுத்தக்கூடிய விலைவாசியையேனும் ஒழுங்குபடுத்தவேண்டியது பின்னும் அதிக அவசியமாகிறது.

(The Field) The Rt. Hon. Lord Addison.

2. கடலைப் பிண்ணாக்கு ஒரு நல்ல உரம். கடலைப் பிண்ணாக்கை உரமாகவும் மாட்டுக் குணவாகவும் செலவழிப்பதால், வெளி நாடு போகாமல் நம் நாட்டிலேயே குவிகிற நிலக்கடலைக்கு அதிகச் செலவும் ஏற்படும். தண்ணீர் பாய்ந்து விளையும் பயிர்களுக்கு முக்கியமாகக் கரும்புக்கு, காலக (Nitrogen) உரம் சேர்ப்பதற்காக நிலக்கடலைப் பிண்ணாக்கும் மற்றும் எண்ணெய்ப் பிண்ணாக்குகளும் நவச்சியக்

கந்தகை (Ammonium Sulphate) யுடன் சண்டைக்கு முன் சேர்த்து வந்தனர். சண்டையின் காரணமாக, கந்தகையின் கிரயம் அதிகமாகியிருக்கிறது; நிலக்கடலைப் பிண்ணாக்கின் கிரயமோ மிகவும் இறங்கி யிருக்கிறது.

நவச்சியக் கந்தகையில் 20.6 சதமானம் காலக மிருக்கிறது. கடலைப் பிண்ணாக்கில் 7.5 சதமானமே காலக மிருக்கிறது. சண்டைக்கு முன், கந்தகையிலுள்ள காலகம் ஒரு இராத்தல் 4 அணு 4 பைசாவாக இருந்ததென்றால், கடலைப் பிண்ணாக்கிலுள்ள ஒரு இராத்தல் காலகம் 6 அணு 3 பைசாவாக இருந்தது. இப்போதைய விலைப்படி பார்த்தால், அவை முறையே 7 அணு 4 பைசாவாகவும், 3 அணுவாகவுமிருக்கின்றன. ஆகவே, கடலைப் பிண்ணாக்குரம் மிகவும் மலிவென்று சொல்லவேண்டும்; எரு உரத்தைக் காட்டிலுமே மலிவாக இருக்கிறது.

ஏக்கருக்கு 300 இராத்தல் காலகமாகக் கடலைப் பிண்ணாக்கை உரமாக இட்டபொழுது ஏக்கருக்கு 61.04 தன் (ton) கரும்பு விளைகிறது. நவச்சியக் கந்தகையை மட்டும் உபயோகித்தபொழுது 48.38 தன்னே விளைந்திருக்கிறது. ஏக்கருக்கு 300 இராத்தலுக்கு அதிகமாகக் காலகத்தை உரமாக இடும்பொழுது சருக்கரைச் சத்துக் குறையலாம். ஆனால், பிண்ணாக்கைப் பொடியாக்கிப் போடுவதால் பொடியாக்குவதற்குத் தக்கதாக அப்படிக் குறைவதும் குறைந்துபோகும்.

பிண்ணாக்கில் பிசிதம் (Protein) அதிகமிருப்பதால், ஆடு மாடுகளுக்கும் நிலக்கடலைப் பிண்ணாக்கு நல்ல உணவாகும்.

Bombay Information.

3. கோலாப்பூரிலும், பீசப்பூரிலும் மழைத் தண்ணீர்ச் செலவைப்பற்றிப் பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. வருடத்தில் 19 அங்குலம் முதல் 26 அங்குல மழையுள்ள வரப்புகளில்லாத நிலங்களில் 4·5 அங்குல மழை நிலத்தையும் பரசிக் கொண்டு வீணாகப் போய்விடுகிறது. மழைத் தண்ணீர் கீழே யிறங்குவதாலும் வெகுவாகச் சேதமாகிறது. மழைக் காலங்களில் கூட மாதம் இரண்டு மூன்றங்குல மழை ஆவியாகப் போய்விடுகிறது. களைகள் வெகுவாரியாக முளைப்பதாலும் மழைத் தண்ணீர் சேதமாகிறது.

மழைத் தண்ணீர் வெளியே போகாதபடி கரைகள் போட்டுக்கொள்ளுவதால் சேதத்தையொழித்துக் கொள்ளலாம். குறைத்துக் கொள்ளலாம். நிலங்கள் பல தட்டுகளாக இருப்பின் மேல்தட்டுகளுக்கும் கீழ்த் தட்டுகளுக்கும் இடையேயும் வரப்புகள் கட்டித் தண்ணீர் வீணாகப் போய்விடாமல் தடுத்துக்கொள்ளலாம். நிலத்திற்குப் பண்ணை எரு அல்லது பசுந்தாள் உரமிட்டுத் தண்ணீரைக் கிரகித்துவைத்துக்கொள்ளக் கூடிய சக்தியை அதிகப்படுத்திக்கொள்ளலாம். இலேசாகவும் பள்ளத்தாக்காகவும் இருக்கிற தரைகளில் எப்பொழுதும் பயிரிருக்கும்படி செய்து அல்லது புல்லை வளர்த்து மழைத் தண்ணீர் வீண்போகாமற் செய்து கொள்ளலாம். மழைக் காலத்தில் ஒவ்வொரு மாதமும் களையெடுக்கலாம். இப்படியெல்லாம் செய்து வருவதால், மழைத் தண்ணீர் அதிகமாகச் சேதமாகாமல், நிலத்திலேயே இருந்து சாகுபடி செய்வதற்கும் உதவும்.

Bombay Information.

“ ஒருபலம் புழுதி காற்பலமாக உழுது நிலங்களைக் காயவைத்திட்டால் பிரபலமாக விளைவது காணும் பின்னுரமும் ஓரவசியமில்லை. ”—விவசாயமுதுமொழி.

ஆ. கிராமப்புனருத்தாரண தேச முன்னேற்றக் குறிப்புக்கள்.

ஐரோப்பாவி லிருக்கும் ஆடுமாடுகள் வீதம் நம் நாட்டிலும் இருந்த போதிலும் நம் நாட்டில் ஐரோப்பாவில் கிடைக்கும் பாலில் ஐந்திலொரு பங்கு பாலே கிடைக்கிறது. நம் நாட்டில் ஆடுமாடுகளில் 6 சதமானமே யுள்ள கனடாவில் 25 சதமானம் பால் கிடைக்கிறது.

நம் நாட்டிலுள்ள பசுக்களிலும் எருமைகளிலும் முறையே 3·5 சதமானமும் 5 சதமானமும் பட்டினங்களிலிருக்கின்றன. பட்டினப் பால் தேவையில் பாதி இவற்றிலிருந்து கிடைக்கிறது. பெரிய மந்தைகளிலும் அரசாங்கப் பண்ணைகளிலும் மற்றும் பாற்பண்ணைகளிலும் கொஞ்சமாகவே பசுக்களும் எருமைகளும் இருக்கின்றன; மற்றவை யெல்லாம் கிராமாந்தரங்களில் எவரிடமும் இரண்டு மூன்று மாடுகளுக்கு மேல் போகாமலே யிருக்கின்றன.

சாதாரணமாக, பசுக்களைக் காட்டிலும் எருமைகளே அதிகப் பால் கொடுக்கின்றன. மூன்று வயதான பசு வருடத்திற்கு 525 இராத்தல் பால் கொடுக்குமென்றால், எருமை 1270 இராத்தல் கொடுக்கிறது. கத்தியவாரிலுள்ள சில எருமைகள் வருடத்திற்கு 2500 இராத்தல் பால்கூடக் கொடுக்கின்றன. பாஞ்சாலத்தில் வருடத்திற்கு 1445 இராத்தல் பால் கொடுக்கும் பசுக்களும் இருக்கின்றன. வெள்ளாடு சராசரி வருடத்திற்கு 170 இராத்தல் பால் கொடுக்கக்கூடும். பர்மாவில் பசு வருடத்திற்கு 380 இராத்தலும், எருமை 490 இராத்தலுமே பால் கொடுக்கின்றன. அளவைக் கவனிக்கும் பொழுது இவை யெல்லாம் பிற நாடுகளைக் காட்டிலும் குறைந்ததென்றே சொல்லவேண்டும். பாலிலுள்ள கொழுப்புச் சத்தைக் கவனித்தால், ஐரோப்பிய அமெரிக்கப் பசுக்களைக் காட்டிலும் நம் நாட்டுப் பசுக்களில் அரைவாசி கூடவே கொழுப்பிருக்கிறது.

Report on the marketing of Milk in
India and Burma.

2. இதுவரை சாகுபடியாகாதிருக்கும் நிலங்களையும் காட்டிலாகாவைச் சார்ந்த நிலங்களையும் ஒவ்வொரு மாகாணத்திலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சர்க்காரே பங்கிட்டுக் கொடுக்கவேண்டும். இந்த ஏழை மக்களுக்கு நன்கொடையளிப்பதற்காக ஒவ்வொரு மாகாணத்திலும் இருபது லட்ச ரூபாவுக்குக் குறையாமல் சர்க்கார் ஒதுக்கி வைக்கவேண்டும். இதன் நிர்வாகமெல்லாம் ஒரு தனி போர்டாரிடத்தில் ஒப்படைக்கவேண்டும்.

பண்டிதர் அம்பேத்கார்.

இ. இலக்கிய இலக்கண அருங்கலைப் போதனுமுறை யாராய்ச்சிக் குறிப்புக்கள்.

1. தகப்பனார் மாத்திரம், தினந்தோறும் சினிமாவுக்குப் போய்க்கொண்டு, பையனை அங்கு போவது கெட்டது என்று சொன்னால், அவர் தன்னை ஏமாற்றுவதாகப் பையன் எண்ணுவான். அவன் மனதில் அது கெட்டதென்றே தோன்றுவதில்லை. அவனுடைய தகப்பனார் தான் அவனுக்கு முதல் இலட்சியம். தகப்பனார் செய்வதைத், தானும் செய்யலாமென்றே அவன் மனதில் தோன்றுகிறது.

தகப்பனார் பையனை அதிகக் கட்டுப்பாடு செய்ய ஆரம்பித்தால், அவன் அவரை ஏமாற்ற

முயற்சிக்கிறான். இது சினிமாவுடன் நிற்ப தில்லை. ஒரு காரியத்தில் தகப்பனார் வார்த்தையில் நம்பிக்கையில்லாமல் போய்விட்டால் அவர் சொல்லும் மற்றக் காரியங்களிலும் நம்பிக்கை பிறப்பது சிரமமாகப் போய்விடுகிறது. எனவே அவர் சொல்லும் வார்த்தைகளை அவன் சாதாரணமாகக் கேட்பதில்லை. தந்தை மிகவுங் கண்டித்தால், அவர் எதிரில் அவர் சொல்வதைக் கேட்பதுபோல் பாசாங்கு செய்வான். அவர் மறைந்ததும், அவர் சொன்னதற்கு மாறாக, தன் விருப்பம் போல் செய்வான்.

இதற்கெல்லாம் ஒரு மருந்து தானுண்டு. அதாவது, பிள்ளையின் மனதில் நாம் சொல்லுவது நல்லது என்ற எண்ணம் உண்டாகவேண்டும். அந் நம்பிக்கை நாம் சொல்லும் வார்த்தைகளால் உண்டாகாது. இயற்கையாகவே குழந்தைகளுக்குத் தங்கள் பெற்றோர்களிடத்திலும், பெரியோர்களிடத்திலும், நம்பிக்கையிருக்கிறது. நாம் நம் தினசரி வாழ்க்கை முறையால் அந் நம்பிக்கையை வளர்க்க வேண்டும். நாம் ஒரு காரியம் செய்துகொண்டு, அதைக் குழந்தைகள் செய்யக்கூடாதென்று சொன்னால், அது இந்த நம்பிக்கையை வளர்க்கத் தக்கதாயிராது.........பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை நன்றாக வளர்க்கவேண்டுமென்றால், அதற்குத் தகுந்தபடி தாங்களும் தங்கள் வாழ்க்கையில் ஒழுக வேண்டும. "நான் எப்படியோ கெட்டுவிட்டேன். ஆனால் நீ சாக்கிரதையாயிரு." என்று பிள்ளைகளிடம் சொல்லுவதில் பிரயோசனமில்லை. குழந்தைகளுக்காகப் பெற்றோர்கள் தங்கள் வாழ்க்கையைப் பண்படுத்திக் கொள்வது மிக அவசியம். வெளித் தோற்றத்திற்கு மாத்திரமல்ல, உண்மையிலேயே அவர்களுடைய வாழ்க்கை திருந்தவேண்டும். பாசாங்கை எளிதில் கண்டுபிடித்துக்கொள்ளக்கூடிய சக்தி குழந்தைகளுக்குண்டு.

சத் சங்கம், பழகும் நண்பர்கள் படிக்கும் புத்தகங்கள், பார்க்கும் படங்கள், கேட்கும் வார்த்தைகள்-இவை அனைத்தும், ஓரளவிற்கும் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையை அமைப்பதில் கருவிகளாகின்றன. ஆனால், இவை அனைத்திற்கும் மேலாகப் பெற்றோர்களின் வார்த்தைகளும், பழக்க வழக்கங்களும், செய்கைகளும், பிள்ளைகளின் வளர்ச்சியில் மிக முக்கியமானவை. எனவே, பெற்றோர் அனைவரும் இதை யறிந்து தங்கள் வாழ்க்கைகளைத் தங்கள் குழந்தைகளின் நன்மைக்காகவேனும் திருத்திக்கொள்ளவேண்டும்.

வித்தியாலயம்.

2. தமிழ் மொழியில் பிற மொழிச் சொற்களும் கருத்துக்களும் கலந்துவிட்டன என்று புழுங்கும் நாமெல்லாம், தமிழ் நாட்டில் அங்கிலம் (பிற மொழி ப-ர்) கலவாமல் தமிழ் பேச முடியாத தமிழனைக் காணும்போது என்ன செய்துவிடப் போகிறோம்?.........தமிழர் தமிழரோடு அங்கில மொழியில் ஏன் பேச வேண்டுமென்றுதான் நான் கேட்கிறேன்...... அன்பர்களே, தமிழ்நூற் கடலில் புலவரெனும் கொண்டற்குழாங்கள் சென்று சென்று, பருகிப் பருகிக் கமஞ்சூல் கொண்டு, மின்னிக் குமிறித் தலைப்பெயலாஞ் சொன்மாரி பொழிக. அம் மழை யாறுகளாகவுங் கால்களாகவும் இடையறாது பெருகிச் சென்று தமிழ் நாடெங்கணும் வளைந்து வளைந்து நூல்கல்லாத் தமிழர் நெஞ்செனும் விளைபுலத்துப் பாய்க. பாய்ந்தால் ஒன்று நூறாக விளையுள் காண்போம். காணும் அந்நாளே தமிழினை - இன்பத் தமிழினைத் துய்க்கும் நன்னாளாகும். இறைவன் அருள் புரிக.

(கலித்தொகைச் சொற்பொழிவுகள்)

வித்துவான் நடேச சர்மா

இ. A. உழவுத் தொழிலுக்கு இன்னும் உதவி வேண்டும்.

உலகத்திலே உலகத்தில் அமைந்திருக்கும் ஐந்து கண்டங்களிலே அக்கண்டங்களில் அமைந்துள்ள ஆசியா என்னும் மிகப் பெரிய கண்டத்திலே ஓர் பாகத்தில் அமைந்திருக்கிற இந்தியா என்னும் நமது தேசத்திற்கு ஏதோ ஒரு தனிப் பெருமை இருந்துவருகிறது! ஒரு மணி நேரத்திற்குள் அழகிய ஒரு நகரத்தைக் கடல் மட்டமாக்கி அதில் நீர் பெருகச் செய்து விடுவதும் ஒரு நிமிஷ நேரத்தில் கடலையே திடலாக்கி அதில் அழகிய ஓர் நகரம் அமைந்து துலங்கும்படி செய்து விடுவதும் ஆகிய விஞ்ஞானக்கலையில் (இலௌகிக ஞானம்) கை தேர்ந்து காட்சியளவிற் காண்பித்து வருகிற மேனுட்டாருங்கூட இந்தியா என்றால் இதைப் பற்றி சிந்தியா திருக்கமாட்டார்கள் அல்லவா? அதற்கேற்பட்ட காரணந்தான் என்ன என்பதை நாமும் இங்குச் சிந்தியா திருக்கமுடியவில்லை. நம் இந்திய நாடு ஏராளமான கிராமங்களை வகித்துள்ள நாடு. கிராமங்களில் இருந்து தான் மக்கள் உயிர் வாழத் தக்க உணவுப் பொருள்கள் உண்டாகி அவை உலகிற்கே உணவளித்து வந்திருக்கின்றன என்பதும் உணவளித்து வருகின்றன என்பதும் உண்மைச் சரித்திர (History) வரலாறு கூறுகிறது. சமீப காலம் வரையும் கிராமங்கள் நல்ல நிலைமையில் தான் இருந்து வந்திருக்கின்றன. ஆனால் தற்காலம் நமது நாடு தாழ்நிலை பெற்றிருக்கிறதென்றும் அதற்குக் காரணம் கிராமங்கள் சீர்குலைந்திருப்பது தானென்றும் ஆதலால் தேசம் முன்னேற வேண்டுமென்றால் கிராமாபிவிர்த்தி ஏற்படவேண்டுமென்றும் தேசத்தொண்டர்கள் பலர்முயன்றுகிராமப்பணியாற்றிவருகின்றனர். அவர்களில் இக் கிராமதூதன் ஆசிரியர் அவர்களும் ஒருவர் ஆவார். இக்கிராமதூதன் விவசாயம், வியாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், சுகாதாரம், ஒற்றுமை இவற்றிற்கெல்லாம் காரணமாகிய கல்வி முதலிய அரும் பெரும் தத்துவங்களை எளியநடையில் இனிமை பெருக எடுத்தோதி வருகிறதென்பது இப்பத்திரிகையின் சந்தா நேயர்கள் நன்குணர்வார்கள். காகிதப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிற இக்காலத்தில் பொது நலத்தை உத்தேசித்தே அவர்கள் தேச சேவையில் ஈடுபட்டுத் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் பொது மக்களின் நன்மைக்காகச் செலவழித்து வருவதோடு இப்பத்திரிகைப் பிரசுரகர்த்தரவர்களின் பேருதவிகொண்டு உயர்ந்த கடிதத்தில் சுத்தப் பதிப்பில் வருஷம் ஒன்றுக்கு ஒரு ரூபாச் சந்தாவில் இப்பத்திரிகையை நடத்தி வருகிறார்கள். "பத்திரிகை படியாத ஒரு மனிதனும் பத்திரிகையைப் பாராட்டாத ஒரு தேசமும் முன்னேறுவது முயல் கோம்பு" என்பது அனுபவத்தில் கண்டறிந்தார் அறிவுரையாகுமன்றோ! ஆதலின் இதுபோன்ற பல உயர்ந்த பத்திரிகைகளைத் தமிழ் மக்கள் நன்கு ஆதரிக்க முன்வர வேண்டாமா? அன்னிய தேசமெல்லாம் உன்னத நிலைமை அடைந்ததற்குக் காரணம் பத்திரிகைதான் என்பது பிரத்தியட்சமாக நாம் கண்டு வரும் காட்சிதானே!

இனிக் கிராமவாசிகளாகிய விவசாயிகளுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் குறைகள் யாவை எனவும் சிறிது ஆராய்வோம். விவசாயத் தொழிலோ பெரும்பாலும் ஆரம்ப முதல் அறுவடை வரையிலும் உழுதல், நீர் பாய்ச்சல் பரம்படித்தல், எருவிடுதல், விதைவிதைத்தல் களை எடுத்தல், கண்காணித்தல், களஞ் சேர்த்தல் முதலான எண்ணிறந்த காரியங்களுக்குப் பணச் செலவு அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் வருவாயோ கடைசியில்தான் கிடைக்கிறது. இதனால் விவசாயிகள் கடன் வாங்க வேண்டியதும் அவசியமாயிருக்கிறது. இதன் மூலம் கடன் கொடுத்தோர் தொல்லையும் ஏற்படுகிறது. இவ்வாறு அல்லும் பகலும் அரும் பாடுபட்டு உழவு நடத்தினாலும் காலத்தில் மழை பெய்யாமை அகாலத்தில் மழை பெய்தல் முதலிய பல காரணங்களினால் நட்டமுமேற்படுகிறது. விவசாயிகளுடைய பிள்ளைகளும் விவசாயத்திற்கு உதவி புரியவேண்டியிருப்பதால் அவர்களுடைய கல்வியும் காற்றில் பறந்துபோய்விடுகிறது. இந்த நிலைமையில் உலக விஷயங்களை அறியவும் விவசாய முறைகளைத் தெரியவும் உயர்ந்த தன்மையில் இலாபகரமான முறையில் உழவு நடத்தவும் அவர்கள் பல பத்திரிகைகளைப் படித்தறிவது தான் எப்படி? இக்குறைகள் எல்லாம் நீங்கிப் பழய காலத்து விவசாய விருத்தியில் உதாரணமாகச் சப்பான், பர்மா முதலிய தேசத்தாரைப் போன்று உழவு நடத்த வேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும்? அரசாங்கத்தாரும் பரோபகார குணமுடைய அரும் பெரும் பிரபுக்களும் ஒருங்கு சேர்ந்து விவசாயிகள் முன்னேறுவதற்காவனவற்றை இன்னும் அதிகமாய்ச் செய்தல் வேண்டும். ஒன்றே புரிதல் வேண்டும்; ஒன்றும் நன்றே புரிதல் வேண்டும்; நன்றும் இன்றே புரிதல் வேண்டும்; இன்றும் இன்னே புரிதல் வேண்டும். ஓர் கிராமவாசி.

இ. B. கிராமதூதன் வரவேற்பு.

விருத்தம்.

ஐந்தெனும் பெரிய கண்டங்கள் அவற்றுள் ஆசியா ஒன்றதைச் சார்ந்த
இந்தியா வளஞ்சேர் நாடிது விளைவில் இணையின்றி மிளிர்ந்தது முன்னர் !
எந்தநாள் இனிநற் காலமென் றேங்கும் எங்களை ஊக்கி முன்னேற்ற
வந்தனை ! கிராமதூதனே ! வருக ! வாழ்கநீ உலகுளவரையே !

இயந்திரங்கொண்டு நடுதல்பின் விளைவில் இயந்திரங்கொண்டதை அறுத்தல்
நயந்தருமென்ற அங்கிலநாட்டு நடைமுறை வளமெலாம் நவின்று
செயந்தரு உழவிற் காவனகூறித் தேர்வுறச் செய்து நற்செல்வ
மயந்தரு கிராமதூதனே ! வருக ! வாழ்கநீ உலகுளவரையே !

கடவுளைஉணரத் தத்துவம்பயிலல் கடமைபோல் கமழ் விவசாயம்
திடமொடிங்குணர நீபெருந்தத்வஞ் செப்பலால் குருவெனத்தேர்ந்தோம்
"இடநில முளதேல் மழைபெயவிளையும் இன்றெனில் இன்றெனுஞ்" சோம்பல்
மடமறக் கிராமதூதனே ! வருக! வாழ்கநீ உலகுளவரையே!

நிலம்பல விருந்தும் உழுதுண நாணி நேரிலாத் தொண்டினிற்சார்ந்து
நலம்பெற முயலும் மானிடர்தமக்கு நயமுற உழுதொழில் மேன்மை
புலம்புகவகுத்து முன்னுறு மார்க்கம் பொருந்திடப் புகன்றிது புவிமேல்
வலம்வரும் கிராமதூதனே ! வருக ! வாழ்கநீ உலகுளவரையே !

"விதிதரும் வழியே வாழ்வுறும் ; வேறு வீணிலேமுயல்வதே" னெனத்தாம்
கதிதரும் முயற்சி புரிந்திடா தேங்கிக் கவலுறும் மானிடர் தமக்கு
நிதிதரும் கல்வி, கைத்தொழில் உழவும் நியமமாய் உணர்த்தி முன்னுறச்செய்
மதிதரும் கிராமதூதனே ! வருக! வாழ்கநீ உலகுளவரையே !

அன்னிய நாட்டார் வறுமையும் பசியும் அகற்றிய நாடிதுபோது
முன்னிய மிடிமை குடிபுகுமாறு முயற்சியை இழந்ததால் மீண்டும்
தன்னிலை உணர உயர்வினி அடையத் தகுமுறை உழைப்பதற்காக
மன்னிய கிராமதூதனே ! வருக! வாழ்கநீ உலகுளவரையே !

உணவுடை தமக்கும் வருந்திநம்நாட்டை உகந்தெதிர் பார்த்தநாடெல்லாம்
பணமலையாகக் குவிப்பது தெரிந்தும் படுத்துறங்கிடு நிலைக்கிரங்கிக்
கணமிதில் ஊக்கம் கைவரச் சிறந்த கட்டுரை நல்கு முத்தமிழின்
மணமுள கிராமதூதனே ! வருக! வாழ்கநீ உலகுளவரையே !

நீயறிந்துரைக்கும் வைத்திய முறைகள் நிதமனுசரித்துமே வந்தால்
நோயறிந்துரைக்கும் வைத்தியர் எதற்கோ நுழைவது வீடுகள்தோறும் ?
தாயகநாட்டில் பசிபிணி இவற்றால் தளர்வுறு வறுமையின் தோற்று
வாயறி கிராமதூதனே! வருக! வாழ்கநீ உலகுளவரையே !

"விகசிதக்கூத்து விகடமுமானால் விரும்பிடும் இது கலிகாலம்
தகவுறு கல்வி உழவு கைத்தொழிலில் சாருமோ" என மனந்தளரேல்
இகமிசை நினதோர் எழில் நலம்பெருமை இனிமைநன்குணர்பவர் உளரால்
மகிமைசால் கிராமதூதனே வருக! வாழ்கநீ உலகுளவரையே !

பூவரும் பிருந்த தேனென வினிக்கும் பொன்பெறு பழந்தமிழ் நடையில்
யாவரும் விரும்ப அரும்பெரும் விடயம் யாவையும் நின்னகத்தடக்கி
நீவரும் நினது வரவினையேற்று நிலைதரு நலமெலாம் பெறுவோம்
வாவரும் கிராமதூதனே வருக ! வாழ்கநீ உலகுளவரையே !

ஓர் கிராமவாசி.

ஈ. சிறந்த வாசகங்கள் செய்யுள்கள் அறவுரைகள் பழமொழிகள்

1. தூய்மை மனம் படைத்த மாதொருத்தி நடக்கும் இடமெல்லாம் பட்ட மரம் தளிர்க்கும்; காய்ந்த மலர் மணக்கும், வாழ்க்கை சிறக்கும்.

மாதரசிகளே! உங்கள் கருணை நிறைந்த கண் பார்வை, மலரொன்றை நிறைந்த அழகுடையதாகச் செய்யுமானால், காற்றினால் உதிராது வெப்பத்தினால் வாடாது பனியால் சுருளாது செய்யுமானால், 'தென்றலே மெல்ல வந்த பூங்காவிடைப் புகுந்து கவரியெனச் செடிகளை அசையச் செய்வாய்' என்று பனி வீழ் காலத்தில் நீங்கள் செவ்விதழ் திறந்து சொல்லக் காற்றும் வருமென்றால், அதனை மாய வித்தை யென்பர். இதனினும் அரியதும் பெரியதுமான ஒன்றையும் நீங்கள் செய்யக் கூடும். சிருட்டியில் சிறந்த ஒரு மலரை, உங்களைப் போன்ற இந்திரிய அறிவைப் பெற்ற ஒரு மலரை அன்புக்கு அன்பினும் அம் மலரை, இன்னும் சிறப்புறச் செய்ய வல்லீர். அதைப் பரிவுடன் காத்துப் பரிமளிக்கச் செய்தால், அதுவும் உங்களைக் காத்து, உங்கள் வாழ்வை உயர்த்தும். எங்கும் இன்பமும் அமைதியும் வெள்ளமாய் ஓடும். பின்னர் உங்கள் வீட்டுத்தோட்டம் மட்டுமின்றி மலையிலும் காட்டிலும் எங்கும் நோக்குமிடந்தோறும் மலருஞ் செடியுமாயமையுமன்றோ!

மாதரசிகளே! இன்னும் நீங்கள் உங்களதாகிய வன்மையைப் பெற்று முறைவழி வினை செய்வீரேல், உலகெல்லாம் இயற்கைவிதி அமைந்து பொலியும்; எங்கும் தெய்வ மணங் கமழும்.

John Ruskin.

2. சஞ்சலம் உற்றார் பால் சென்று அவர் கலக்கம் தீர்ப்பதும், நோயுற்றார் நோய் களைவதும், வருந்துவார் வருத்தம் துடைப்பதும் திக்கற்று நிற்பாருக்கு வழி காட்டுவதும் காத்தளிப்பதுமான ஈகைநெறிக் குணங்களே அரச வன்மையின் இலக்கணமாகும். கோலும், நெடுங்கொடியும், மணிமுடியும் எவருக்கும் அரச வைபவத்தைத் தந்ததில்லை. நல்லோரைக் காப்பதும், தீயோரைத் தண்டிப்பதும் அரசின் தொழில். நியாயத்தை அடிப்படையாய் கருணையை வழிப்படியாய்க் கொண்டுள்ள தவிசே சிங்காதனமாகும். இத்தகைய செல்வாக்கைப் பெற்று வீட்டிலும், வெளியிலும் அரசிகளாய் நம் மங்கைமார் அமைய விரும்பீரோ, காளைகாள் சோல்லுங்கள்.

John Ruskin.

(தமிழ்ப்பெண் பேணப் பிறந்தவளென்பதை அச்சொல்லே குறிப்பதையும், அவள் வாழ்க்கைப் படவுமே வாழ்க்கைத் துணையாகியும், வாழ்வரசியாகியும் வீட்டிலும் வெளியிலும் பல்லாயிர ஆண்டுகளாக வாழ்ந்து வந்திருக்கிறாளென்பதையும், தமிழக் காளைகாள் உணர்மின்கள்! 'தமிழர் நாகரிக மிகுந்தவாறென்னே! நாமிப்போதிருக்கும் நிலைமைதானென்னே! என்பனவற்றையும் சிந்தியுங்கள். ப—ர்.)

II.

"அறிவை அழிக்தும்; செயலழிக்கும்;
அழியா மானந் தனையழிக்கும்;
செறியும் அறிஞர் மதியாத
செருக்கை விளைக்கும்; ஈன்றாளும்
முறியும் வெறுப்பு மிகவிளைக்கும்;
முனிவு விளைக்கும்; பகை யஞ்சாக்
குறிகள் விளைக்கும்; நகை விளைக்கும்;
கோள்ளேல் கள்ளுண் டலைமந்தா!"

விநாயக புராணம்.

III. 1. ஆவணி தலைவெள்ளமும் ஐப்பசி கடை வெள்ளமும் கேடுதான்.
2. புரட்டாசி பேய்ந்தாலும் பெய்யும் காய்ந்தாலும் காயும்.
3. கார்த்திகை மாதத்து மழையில் கல்லுக்குள்ளிருக்கும் புல்லும் கதிராகும்.
4. கார்த்திகைக்கப்பால் மழையுமில்லை, கர்ணனுக்கப்பால் கொடையுமில்லை.
5. மார்கழி முடிந்தால் மழையுமில்லை, பாரதம் முடிந்தால் படையுமில்லை.
6. கோட் சொல்லும் வாய், காற்றுடன் கலந்த நெருப்பு.
7. செய்த தீவினை செய்தவர்க்கே யெய்திடும்.
8. சூதும் வாதும் வேதனை செய்யும்.
9. சுக துக்கம் சுழல் சக்கிரம்.
10. சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்.

IV. 1. ஒருவன் வினவாதிருக்க அவன்பால் தன் வீட்டுக் காரியங்களைப்பற்றிச் சொல்லலாகாது.
2. பகைவனுயினும் அவன் மாட்டுள்ள குணங்களைக் கொள்ளுதலும், குருவாயினும் அவன்பாலுள்ள குற்றங்களைத் தள்ளுதலும் வேண்டும்.
3. இழிந்த காரியத்தில் ஏவுவோன் குருவாயினும் அவனை அது தீதென்று அறிவுறுத்தல் வேண்டும். நல்ல காரியத்தை அறிவிப்போன் தாழ்ந்தவனுயினும், அவன் மொழியைக் கடத்தலாகாது.
4. இன்ன காலத்தில் இன்னது செய்வதென்று காலத்தை வரையறைப் படுத்திக் காரியம் புரிதல் வேண்டும்.

(பண்டிதமணி மொழி பெயர்ப்பு.) சுக்கிர நீதி.

அரசாங்க விடுமுறை நாட்கள் அதிகமெனத் தெரிவதால், அடுத்த வருட முதல் அவை குறைக்கப் படும். இனி, சனவரி மீ 2ம் உ விடுமுறையாக இருக்கமாட்டாது. டிசம்பர் முந்தின சனி 24ம் உ யில் வந்தாலன்றி மற்றப்படி விடுமுறையாக இருக்கமாட்டாது. நல்ல வெள்ளி (Good Friday) முதல் ஈஸ்டர் திங்கள் முடியத்தான் ஈஸ்டர் விடுமுறையாக இருக்கும். கத்தோலிக் கிறித்தவர்களுக்கு மட்டும் நல்ல வெள்ளிக்கு முந்தின வியாழனும் விடுமுறையாகும்.

Press Communique No. 50.